# ஜீநா

புததாண்டு வாழததுக்கள்!









இலங்கையில் விலை 2



பைலட் பிரேம்நாத்’ படத்தில் நம்நாட்டு
மணிமேகலை நடிக்கிறார்



இலங்கையில் தயாராகும்
பல படங்களில்
ஹெலன்குமாரி
நாயகியாக
நடிக்கிறார்



வாடைக்காற்று
படத்தில்
கே. ஏ. ஜவ[illegible]ர்

# எம்.ஜி.ஆரா, - கருணாநிதியா
# இவர்களில் யார் வெல்வார்?

தமிழக முதல்வராக வீற்றிருக்கும் முன்னாள் திரைப்பட நடிகரும் மக்கள் திலகமுமான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மீண்டும் திரையுலகிற்குள் நுழைவது இப்போது அநேகமாக உறுதியாகிவிட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், திரையுலகமும் ஆட்சிக்கு வர பெரிதும் உதவியாக இருந்திருக்கிறது.

பல்லாண்டு காலமாக அசைக்க முடியாமல் இருந்துவந்த காங்கிரஸ் ஆட்சியை தி. மு. கழகம் வீழ்த்தியதற்கு, திரையுலகையும் அந்தக் கழகம் பிரசார சாதனமாக அமைத்துக் கொண்டது ஒரு முக்கிய காரணமாகும்.

அமரர் அண்ணா அவர்கள் தி. மு. க. பொதுச் செயலாளராக இருந்த போது திரைக்கதை வசனம் எழுதினார். அதுபோலவே கலைஞர் கருணாநிதியும் திரைக்கதை வசனம் எழுதி வந்தார்.

கலைஞர் கருணாநிதி 'பராசக்தி' படத்திற்குக் கதை வசனம் எழுதிய போது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அந்தக் கழகத்தோடு ஈடுபாடு கொண்டிருந்தார், காலப்போக்கில் அவர் காங்கிரஸ் பக்கமாக காலடி எடுத்து வைக்கத் தொடங்கினார். இந்த சந்தர்ப்பத்தில் தி. மு. கழகத்திற்கும் ஆஸ்தான நடிகர்கள் தேவைப்பட்டார்கள்.

இந்தத் தேவையை, மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனையும், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனையும் கொண்டு பூர்த்தி செய்ய தி. மு. கழகம் எண்ணியது. தி.மு. கழகத்தின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் திரைப்படங்களின் மூலமாக பரப்புவதற்கு இந்த இரண்டு நடிகர்களும் பயன்படுத்தப்பட்டார்கள். அதன் மூலம் பெரும் புகழையும் இவர்கள் சம்பாதித்தார்கள்

இப்படியாகத் திரையுலகின் மூலமும் தி. மு. கழகம் செய்துவந்த பிரசாரம் அந்தக் கழகத்தை ஆட்சி பீடம் ஏற்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலமானதன் பின்னர் தி. மு. கழகத்தில் வெடிப்பு ஏற்பட்டது. இந்த வெடிப்புக்கு திரைப்படத்துறையும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

மக்கள் திலகம் எம். ஜி. ஆரைத் தி. மு கழகம் பிரசாரத்திற்கு பயன்படுத்தியது போலவே தனது மகன் மு. க. முத்துவையும் பயன்படுத்த கலைஞர் கருணாநிதி நடவடிக்கை எடுத்தார். சில திரைப்படங்களையும் தயாரித்தார்.

இதுவும், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். தி. மு. கழகத்தைவிட்டுப் பிரிந்து அண்ணா தி. மு. க என்ற பெயரில் கழகம் அமைக்க காரணமாக அமைந்தது.

தமது மகன் மு. க. முத்துவை வைத்து தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் தோல்வி கண்டதைத் தொடர்ந்து கருணாநிதி திரையுலகிலிருந்து ஒதுங்கி இருந்தார்.

மக்கள் திலகம் எம். ஜி ராமச்சந்திரனும் தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றதைத் தொடர்ந்து திரையுலகைவிட்டு ஒதுங்க வேண்டியதாயிற்று.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். திரை உலகை விட்டு ஒதுங்க வேண்டிவந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த கலைஞர் கருணாநிதி திட்டமிட்டு இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் தான் மக்கள் திலகம் எம். ஜி ராமச்சந்திரனுக்கும் மக்கள் கலைஞர் ஜெய்சங்கருக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்படத் தொடங்கின. பின்னர் அது நிரந்தரமாகி



## 43வது தடவைதான் ஓ.கே!

''அடிமைப் பெண்'' என்ற படத்திற்கு ஆலங்குடி சோமுவை ஒரு பாடல் எழுதிக்கொண்டுவரச் சொன்னார் எம். ஜி. ஆர். சோமு எழுதிக்கொண்டுவந்த பல பாடல்களைச் சரியில்லை என்று சொல்லி விட்டார். கடைசியாக 'தாயில்லாமல் நானில்லை' என்ற 43-வது பாடலை ஓ. கே. செய்தார்.

இருவருக்குமிடையில் வேற்றுமையை தீவிரமாக வளர்த்துவிட்டது.

இதுவே நல்ல சகுணம் என்பதை உணர்ந்த கலைஞர் கருணாநிதி மக்கள் கலைஞர் ஜெய்சங்கரைப் பிடித்துக் கொண்டார், அவரையே தான் கதை வசனம் எழுதும் படத்திற்குக் கதாநாயகனாகவும் ஆக்கிவிட்டார்.

ஜெய்சங்கர், தயாரிப்பாளர்களுடன் ஒத்துப் போகும் நல்ல சுபாவம் கொண்டவர் என்பதும் கலைஞர் கருணாநிதிக்குச் சாதகமாகவே அமைந்தது.

கலைஞர் கருணாநிதி, தம்முடன் மோதும் ஜெய்சங்கரை வைத்துத் திரைப்படம் தயாரிக்கிறார் என்ற செய்தி மக்கள் திலகம் எம். ஜி ஆருக்கு சற்று கஷ்டமாகவே இருந்திருக்க வேண்டும்.

திரைப்படத்துறையின் மூலமாகவும் தமிழகத்தின் ஆட்சியை மாற்றும் சூட்சுமம் கலைஞர் கருணாநிதிக்குக் கைவந்த கலை என்பதை மக்கள் திலகம் புரிந்து வைத்திருப்பது அவருக்குக் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கும் என நிச்சயமாக நம்பலாம்.

தமிழக சட்டசபையில் நேருக்கு நேர் இருந்து வாதிடுபவர்கள் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனும் கலைஞர் கருணாநிதியும். ஆனால் கலைஞர் கருணாநிதியோ, திரைப்படத்துறையில் புகுந்து மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனைச் சாடத் தயாராகிறார்.

சட்டசபையில் கலைஞர் கருணாநிதியின் சவாலை ஏற்பது போலவே திரையுலகிலும் ஏற்றால்தான் நன்றாக இருக்கும். அதுவே எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும் என்பதை மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனும் அவரது சகபாடிகளும் உணர்ந்துவிட்டார்கள். அதன் காரணமாகவே மக்கள் திலகம் எம். ஜி ராமச்சந்திரன் தமிழக முதல்வராக இருந்துகொண்டு மீண்டும் திரையுலகிற்குள் நுழையத் தயாராகிறார்.

இவர்கள் இருவரும் சட்டசபையில் மோதிக் கொள்வதைப் படிக்கவே மிகவும் சுவையாக இருக்கிறது. திரையுலகிலும் அவர்கள் மோதப் போகிறார்கள் என்றால், அது நமது ரசிகர்களுக்கு விருந்தாக இருக்காதா என்ன?

இந்தப் போட்டியில் மக்கள் திலகமா, கலைஞர் கருணாநிதியா ஜெயிப்பார்? காலம் விரைவில் பதில் சொல்லும்.

'ஜெய்'

---

# இலக்கியக் காதல்!

க. கலாமோகன்.

காளை ஒருவன் கன்னி ஒருத்தி பால் மையல் கொண்டான். அவளது அழகிய அங்கங்கள் தங்கங்கள் போல் ஜொலிப்பதைக் கண்டு மகிழ்ந்தான். மங்கையிடம் தன் மனதைப் பறி கொடுத்தான். எனவே, அவன் அவளிடம் சென்று 'கண்ணே, அணுப்பொழுதும் உன் நினைவினால் வாடுகின்றேன்' என உரைத்தான், அவ்வளவுதான். படீரென அவள் தன் முகத்தைத் திருப்பினாள். இதைக் கண்ட காளை பதட்டமடைந்தான். தொடர்ந்து அவளிடம் கெஞ்சினான். அவளோ அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

எனவே, ஆசையோடும், காதலோடும் சென்ற இளைஞனின் இதயம் ஒடிந்தது. மனம் சிதைந்தது.

மேற்கூறிய காட்சியைப் பரணர் என்னும் பைந்தமிழ்ப் புலவர் காணுகின்றார்.

அவரது கற்பனை வெள்ளம் பீறிட்டுப் பாய்கின்றது. ''தெருவிலே வண்டியொன்று செல்கின்றது. வண்டி நிறைய மூடை மூடையாக உப்பு. திடீரெனப் பெருமழை பெய்கின்றது, அவ்வளவுதான். வண்டியும் சாக்குமே மிஞ்சுகின்றன.'' என்னும் உவமையை, மனமுடைந்து, காதலிலே தோல்வியுற்ற இளைஞனின் நிலைக்கு உருவாக்கி, கீழ் வருமாறு இலக்கியரசம் ததும்பப் பாடுகின்றார்.

''மகிழ்ந்ததன் தலையும் நற
உண்டாங்கு,
விழைந்ததன் தலையும் நீ
வெய்துற்றனை
இருங்கரை நின்ற உப்பு ஒய்
சகடம்
பெரும் பெயல் தலைய வீ
இத்தாங்கு, இவள்
இரும்பல் கூந்தல் இயல் அணி
கண்டே''

பரணர்.

நூல்—குறுந்தொகை.

---

# அடுத்த கீதா மே மாதம் 1 ஆம் திகதி

கீதாவின் அடுத்த இதழ் மே மாதம் 1 ஆம் திகதியன்று வெளியாகும். அதனைத் தொடர்ந்து கீதா ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதியன்று வெளிவரும்.

'கீதா' சிங்கள இதழ் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் மாதந்தோறும் அதே திகதியில் வெள்வர இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## தமிழகத்தில் தமிழ்நெஞ்சன்

'கீதா' ஆசிரியர் திரு. தமிழ்நெஞ்சன் ஏப்ரல் முதலாம் திகதியன்று தமிழகம் பயணமானார். அவர் சுமார் இரண்டு வார காலம் அங்கு தங்கியிருந்து விட்டு இலங்கை திரும்புவார்.

கீதா

நம்மைக் கடந்து சென்ற பழைய ஆண்டிற்கு நன்றி கூறிவிட்டு, பிறந்திருக்கும் புதிய ஆண்டிற்கு வாழ்த்துக் கூறி வரவேற்போம்!

புத்தாடை புனைந்து, புதுப்பானையில் பொங்கி, புதுக்கணக்கெழுதி, புதிய தொழில்களைத் தொடங்கிடும் ஒரு புனித நாளாக இச்சித்திரைத் திங்கள் தமிழர்களால் கருதப்பட்டு வருகிறது.

நமது குடும்பத்தினர் மத்தியில் எத்தனைதான் காழ்ப்புணர்ச்சிகள், கோபதாபங்கள், உட்பூசல்கள் இருந்தாலும் அவைகளை மறந்து துறந்து, உற்றார், உறவினர், சுற்றத்தார் ஆகிய அனைவருடனும் கலந்து, பகிர்ந்து, மகிழ்ந்து, உண்டு, உறவாடி ஒற்றுமையைக் கொண்டாடி மகிழும் நன்னாள் சித்திரைத் திங்களின் முதல் நாளாகும்!

பிறந்திருக்கும் புத்தாண்டை நாம் பேருவகையுடன், பெருமையுடன் வரவேற்றல் மட்டும் போதாது! புதிய ஆக்கங்களை வரவேற்க வேண்டும்! புதிய நோக்கங்களை வரவேற்க வேண்டும்!

புதிய சிந்தனைகள் பிறப்பதற்கு வழிகோல வேண்டும்!

புதிய கலாசாரப் பரிவர்த்தனைகள் நடைபெறுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்!

புதிய உணர்வுகளுக்கு, புதிய எண்ணங்களுக்கு வழி காட்ட வேண்டும்!

கலை உலகில் புதிய பரீட்சார்த்தங்கள் நிகழ்த்தப்பட வேண்டும்!

புதிய ரசனைகள் பூப்பதற்கு இடந்தரப்பட வேண்டும்!

இலங்கை- இந்தியத் திரைப்படங்கள் ஈழத்து நடிகர்களையும் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்!

பிறந்திருக்கும் இப்புத்தாண்டு 'வாடைக்காற்று' என்ற நல்லதொரு திரைப்படத்தைத் தந்திருக்கிறது!

சர்வதேச ரீதியில் இப்படம் புகழ் பெறப்போகிறது என்பதை இப்பொழுதே நாம் 'கீதா' மூலமாகச் சொல்லி வைக்க விரும்புகிறோம்!

கடந்த ஆண்டை விட பிறந்திருக்கும் புத்தாண்டு இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்கும் புதிய தெம்பைத் தந்திருக்கிறது.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒரு சில காரணங்களால் வேறுபட்டிருந்தாலும், புத்தாண்டு கொண்டாடுவதிலும், புத்தாடை புனைவதிலும், கொடுக்கல் வாங்கல் செய்வதிலும், 'கை விசேஷம்' தருவதிலும், பெறுவதிலும் கலந்து, பகிர்ந்து வாழ்கிறார்கள்!

இதனை யாராலும் மறுக்கமுடியாது!

'கீதா' தனிப்பட்ட ஒரு இனத்தின் பத்திரிகையல்ல! தேசிய உணர்வு மேலோங்கி நிற்பவர்களால் நடத்தப்பட்டு வரும் பத்திரிகை. அதனால்தான் நமது சிங்களக் கலைஞர்களுக்கும், அவர்களின் கலை வளர்ச்சிக்கும் உறுதுணை புரியுமுகமாக 'கீதா'வைச் சிங்கள மொழியில் இம்மாதம் 15ம் திகதி முதல் வெளியிடுகிறோம்.

இந்த முயற்சி நமக்கொரு பலப்பரீட்சைதான்!


இருப்பினும் தேசிய உணர்வுக்குமுன் அது நமக்கு ஒரு துரும்பாகி விட்டது!

எனவே—

பிறந்திருக்கும் புத்தாண்டும், பிறக்கப் போகும் புத்தாண்டுகளும் வழிவகுக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம்!

வழக்கம் போல வந்து போகும் ஆண்டாக இந்த ஆண்டும் இருந்துவிடக் கூடாது என்பதை ஒவ்வொரு கலைஞர்களுக்குமே சொல்லி வைக்க விரும்புகிறோம்!

ஆசிரியர்




அனைவருக்கும் எமது தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!


ஏப்ரல் 1-4-78 கீதம்: 5 நாதம்: 30
நிர்வாக ஆசிரியர்: வெளியீட்டாளர்
E. சிதம்பரம்.
ஆசிரியர்: தமிழ்நெஞ்சன்.
'Geetha' MONTHLY.
MANAGING EDITOR, PUBLISHER
E. CHIDAMBARAM
EDITOR. THAMILNE[illegible]JAN

# REST...

இலங்கை வந்துள்ள இந்திய நடிகர்களுக்கு ஓய்வு கிடைப்பதே அபூர்வம். கிடைத்த வேளைகளில் நமது அலுவலக படப்பிடிப்பாளர் 'தவம்' தமது காமராவுடன் அவர்களை டைரக்ட் செய்வதுண்டு. அப்படி கிடைத்த படங்கள் இவை.




மேஜர் சுந்தரராஜன்





விஜயகுமார்




நகைச்சுவை நடிகர் வெங்கட்ராமன்



ஒளிப்பதிவாளர் விநாயகம்



தமிழ்நெஞ்சன் - பிரேமானந்த் - ஜெயசீலன்.










புரடக்ஷன் மனேஜர் ஐய்யங்கார்




பிரேமானந்த்.

# தமிழ்த் திரையுலகின் தலைமை 'பைலட்' சிவாஜி

இலங்கை இந்தியக் கூட்டுற வில் உருவாகும் 'பைலட் பிரேம் நாத்' படப்பிடிப்பு கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையில் ஹெந்தலை விஜயா ஸ்டு டியோவில் நடைபெற்றது.

சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக் கும் பிரமாண்டமான 'செட்'டில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஸ்ரீதேவி, விஜயகுமார், ஜெய் கணேஷ், மேஜர் சுந்தரராஜன், ஜெயசித்ரா, தேங்காய்சீனிவாசன், மனோரமா, சத்யப்பிரியா சம்பந்தப் பட்ட காட்சிகள் படமாக்கப்பட் டன.

கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையைத் தவிர மற்ற நாட் களில் எல்லாம் தினமும்காலை9மணி முதல் மாலை 6மணி வரை படப் பிடிப்பு நடைபெற்றது. படப் பிடிப்பை காண்பதற்கு அனுமதி பெற்றவர்கள் படப்பிடிப்பு அரங் கிற்குள் அனுமதிக்கப்பட்டார்கள். இதனால் படப்பிடிப்பு அரங்கிலும் கூட்டம் நிறைந்து வழிந்தது.

இந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத் துவதற்காகத் தயாரிப்பாளர்கள் சிலநடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தார்கள். படப்பிடிப்பு அரங் கிற்குள் அனுமதிக்கப்படுவோர் ஒரு 'ஷாட்' முடிந்ததும் வெளி யில் அனுப்பப்பட்டார்கள். பின் னர் அங்கு திரும்பவும் ரசிகர்கள் அனுப்பப்பட்டார்கள்.

இதுபோக ஸ்டுடியோ வாயிலி லும், ஸ்டுடியோவைச் சுற்றியும் பெரும் திரளான மக்கள் நின்றிருந் தார்கள்.

படப்பிடிப்பைக் காண அரங் கிற்குள் மக்கள் கூட்டம் கூட்ட மாக வந்தாலும் நடிகர்களோ, ஏனைய கலைஞர்களோ சோர் வடையவில்லை. எல்லோரும் உஷா ராக இருந்து படப்பிடிப்பை சுறு சுறுப்பாக நடத்தினார்கள். அதே வேளையில் ரசிகர்களுடனும் கல கலப்பாகப் பழகினார்கள்.

படப்பிடிப்பில் கலந்துகொண்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மிக மிக 'ஜாலியாகக்' காணப்பட் டார்.

ஒருநாள் படப்பிடிப்பில்—

பிரேம் ஆனந்த் கண் தெரியாத தனது காதலி ஸ்ரீதேவியுடன் அவ ரது வீட்டுக்குள் வருகிறார். அப் போது ஸ்ரீதேவியின் தந்தையான 'பைலட் பிரேம்நாத்' (சிவாஜி) சமையலறையில் இருந்து கரண்டி யுடன் வருகிறார்.

ஜோ ஜீ. ஜெயசிலன்

கரண்டியில் இருந்துவரும்வாசனை யைத் தெரிந்துகொள்ளும் ஸ்ரீதேவியை, 'வாசனை அடிக் குதே' என்று வசனம் பேசச் சொன்னார்கள். ஸ்ரீதேவியோ ''வாசனை இருக்குது'' என்று இரண்டு தடவைகள் ஒத்திகையின் போது சொன்னார். உடனே சிவாஜி ''வாசனை இருக்காமல் கேக்கவா செய்யும்?'' என்றார்.


அதே காட்சியில், பிரேம் ஆனந் திடம் ''உங்க அப்பா யாரு'' என்று கேட்கிறார் சிவாஜி. அதற்கு பிரேம் ஆனந்த் தமது தந்தை சிறையில் இருப்பதாகக் கூறுகிறார். இந்த ஒத்திகை நடந்தபோது டைரெக் டர் திருலோகச்சந்தரை நெருங்கி, ''உங்க அப்பா யாருன்னு'' நான் கேட்க ''நோ பாதர், நோ மதர், நோ வைவ்'' என்னு எப்படி இருக் கும் என்று 'ஜோக்'கடித்துவிட்டுச் சிரித்தார்.

நடிகை ஸ்ரீதேவி சிவாஜியை ஒரு சமயம் கட்டியணைத்தார். அவ் வளவுதான், அவரும் ஸ்ரீதேவியைக் கட்டிப்பிடித்து 'போல்ரூம்' டான்ஸ் ஆடிக்காட்டினார். போதாதற்கு 'மியூசிக்' வேறு வாயால் கொடுத் துக்கொண்டார்.

ஒரு சமயம் டைரெக்டர் 'கட்' என்று சத்தம் கொடுத்தார். அப் போது ரசிகர்கள் பக்கமாக திரும் பிய சிவாஜி டைரெக்டர் ''கட்'' என்று சொல்லும்போது நீங்கள் எல்லோரும் ''டோன் கட், டோன் கட்'' என்று சத்தம் போடவேண் டும் என்றபோது ரசிகர்களுக்கு சிரிப்பு தாங்கவில்லை.

இன்னொரு சமயம் சிவாஜி, ரசி கர்கள் பக்கம் வந்து, ''டைரெக்டர் 'டேக்' என்று சொல்லும்போது நீங்கள் எல்லோரும் ''யேஸ் வி ஆர் ரேக்கிங்'' என்று சொல்ல வேண்டும் என்று சொன்னபோது சற்று அதிகமாகவே சிரிப்பொலி எழுந்தது.

ஸ்டிடுயோவில் ஒரு நாள்



PILOT PREMNATH

இந்தப் படப்பிடிப்பின்போது, 'பைலட் பிரேம்நாத்' வீட்டு வேலைக்காரராக நடிக்கும் வெங்கட்ராமனையும் 'செட்'டில் சந்தித்தேன். ''உங்கள் சாரக்கட்டு பிரமாதம்போங்கள்'' என்று சொன்ன போது, ''இந்தக் கட்டு சிவாஜி சார் போட்டது. இப்படித்தான் சிலோனில்' கட்டுவாங்கண்ணு, அண்ணன் சொன்னுங்க. கட்டு எப்படி' என்று கேட்டார். பிரமாதம் என்று நானும் சொன்னேன்.

வெங்கட்ராமனுக்கு ''சிலோன் ஸ்டைலில் சாரம் கட்டுவதற்குப் பழக்கிக் கொடுத்த சிவாஜி, நடக்கும் முறையையும் படப்பிடிப்பின் போது செய்து காட்டினுர்.

நடிகர் திலகத்தின் பயிற்சி என்றுல் எப்படி இருக்கும் என்பதையும், அவருடன் இணைந்து நடிக்கும் நட்சத்திரங்கள் ஜொலிப்பதன் ரகஸியத்தையும் இலங்கை ரசிகர்கள் அன்று கண்கூடாகவே கண்டு கொண்டார்கள்.

படப்பிடிப்பைக் காண வந்த சிலர் சிவாஜியைக் கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தம் கொடுத்தார்கள். உடனே சிவாஜி ஸ்ரீதேவியிடம் கன்னத்தைக் காட்டி ''கன்னத்தில் ஏதாவது காயம் இருக்கிறதா?'' என்று கேட்க ''நோ... நோ...'' என்று சொல்லிவிட்டுச் சிரித்த ஸ்ரீதேவி அப்போது 'சிரிதேவி' ஆனுர்.

'பைலட் பிரேம்நாத்' படத்தின் ஒரு 'ஷாட்' எடுத்து முடிக்கப் பட்டதும், அரங்கிற்குள் அனுமதிக்கப்பட்டு இருந்த பார்வையாளர்கள் சிலர் அகற்றப்பட்டார்கள். அப்போது சிவாஜி, ''மெட்னி ஷோ முடிஞ்சிட்டு இப்போது 6 30 'ஷோ' வுக்கு டிக்கட் கொடுங்க' என்று சொன்னபோது, சாந்தி தியேட்டரின் அதிபர் சிவாஜி கணேசன் கண்முன் தோன்றி மறைந்தார்.

ஒரு 'ஷாட்'டில், சிவாஜி கையில் 'பெல்'டுடன் காணப்பட்டார். அப்போது அவர் ஏதோ வசனம் பேசினுர். அந்த வசனத்தை முடிப்பதற்குள் பிரேம் ஆனந்த் இரண்டு தடவை குறுக்கிட்டார். 'கையில் பெல்டுடன் இருப்பதால் பையன் பயப்படுறனே'' என்று டைரக்டரிடம் கூறிய சிவாஜி, ''இதை பார்த்தா பாம்பை பிடிச்சிருக்கிற மாதிரியும் இருக்கு'' என்ருர்.

படப்பிடிப்பு அரங்கை விட்டு சிவாஜி மேக்கப் அறை பக்கமாக போனபோது, ஸ்டுடியோவின் ஒருபுறத்தில் நின்ற ரசிகர்கள் ''பைலட் பிரேம்நாத் வாழ்க'' என்று குரல் எழுப்பினுர்கள். அந்தக் குரல்கள் காதில் விழுந்தது தான் தாமதம், சின்னக் குழந்தை ஒன்று துள்ளி ஓடுவதைப்போல பூச்செடிகளை எல்லாம் தாண்டிக் கொண்டு ரசிகர்கள் பக்கமாக ஓடினுர்.

அவர்களுக்கு மிக மிக அருகாமையில் சென்று தன் அன்பைத் தெரிவித்துவிட்டு சிவாஜி திரும்பிய போது ''பைலட் பிரேம் நாத் வாழ்க'' ''அண்ணன் சிவாஜி வாழ்க'' என்ற ரசிகர்களின் அன்பு ஆரவாரம் பலமாக ஒலித்தது.


படப்பிடிப்பு இடைவேளையின் போது, இந்தப் படத்தின் இணைத் தயாரிப்பாளர்களில் ஒருவரும், இணைடைரெக்டருமான ஜோ தேவ் ஆனந்துடன் உரையாடிக்கொண்டு இருந்தேன். அப்போது வானத்தில் ஒரு விமானம் வட்டமிட்டுக் கொண்டு இருந்தது.

''என்ன ஜோ சார், 'பைலட் பிரேம்நாத்'தைத் தேடித்தான் விமானம் வருகிறதோ'' என்று நான் வேடிக்கையாகக் கேட்டேன்.


'இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே இப்படி விமானம் அடிக்கடி பறக்கிறது'' என்ருர் ஜோதேவ் ஆனந்த்.

ரசிகர்களுக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசனை எப்படியாவது ஒரு தடவை பார்த்துவிட வேண்டுமென ஆசை இருப்பதுபோல, 'பைலட் பிரேம்நாத்'தையும் ஒரு தடவை பார்த்துவிடவேண்டுமென்ற ஆசை அந்த விமானத்துக்கு மட்டும் இருக்காதா என்ன?

சிவாஜி என்ன சாதாரண 'பைலட்'டா? தமிழ்த் திரையுலகின் தலைமை 'பைலட்டே' அவர் தானே!



தமிழ்நாட்டுத் திரையுலக நகைச்சுவை வேந்தனுக மணிமுடி தரித்திருக்கும் நடிகர் நாகேஷ் இரண்டு தெலுங்குப் படங்களை டைரக்ட் செய்து வருகிருர். 'முந்தானை' என்ற பெயரில் ஒரு தமிழ்ப் படத்தையும் டைரக்ட் செய்கிருர். இவைகளைவிட பெரிய விஷயம் இவர் டைரக்ஷனில் சிவாஜி நடிக்கப்போகிருர் என்பதுதான்!



## வணக்கமுங்க..

காரில் போய்க்கொண்டிருக்கும் போது எந்த ரசிகர் கைகாட்டினுலும் அவர்களுக்கு கரம்குவித்து வணக்கம் செலுத்தும் நடிகர் ஒருவர்தான் தமிழ் நாட்டில் இருக்கிருர். அவர் பெயர் முத்துராமன்!

# ஊருக்குத்தாண்டி உபதேசம் நமக்கல்லடி கண்ணே!

நமது நாட்டுக் கலையுலகம் ஒரு புதுமையான உலகம். சில காலம் அது தூங்கி வழியும். திடீர் திடீர் என விழித்துக் கொள்ளும். இப்போது தோன்றியிருப்பது 'விழித்திருப்புக் காலம்'. விழிப்பை ஏற்படுத்திவிட்டது 'பைலட் பிரேம்நாத்' திரைப்படம்.

பத்திரிகைகளைப் புரட்டினால் கருத்து மோதல்கள்-

சந்தி சந்தியாக சர்ச்சைகள்-

மண்டப வழியாக கருத்தரங்குகள்-

சபாஷ்! ஆராயப்பட வேண்டிய விவகாரம், அலசப்படவேண்டிய விஷயம்.

இப்படியான கருத்தரங்குகளில் கலந்துகொண்டு இந்த முயற்சி தவறு என சிலர் வாதாடுகிறார்கள். ஆழமான கருத்து அவர்கள் விஷயத்தில் இருந்தால் ஏற்கப்பட வேண்டும். ஆனால் 'ஊருக்குத் தானடி உபதேசம். எனக்கல்லடி' என்று இது இருந்தால், அல்லது நடந்தால், இல்லை நடந்திருந்தால் நாமும் அந்தக் கருத்துக்களை வெளியிடுபவர்கள் பற்றி அலசிப் பார்ப்பது நியாயம்தானே!

இந்தியாவில் நடைபெற்ற 'அண்டர் செக்ரடரி என்ற நாடகத்தை காப்பியடித்து இங்கே காதல் ஜாக்கிரதை' என்ற பெயரில் எஸ். ராமதாஸ் மேடையேற்றினாரே, இது எதனால்?

'எக்ஸ்ரா' பாத்திரத்தை ஏந்துவதைவிட இது ஏற்றமானது என இவர் கருதுகிறாரா? இல்லை. அந்தப் பாவத்தை எண்ணி இப்போதும் இவர் மனஸ்தாபப்படுகிறாரா?

## இந்தியக் கலைஞர்களை எதிர்க்கும் இவர்கள் வாதம் நியாயமானதா?

மற்றவர், நடிகர் தனரத்தினம். ஈழத்தின் முதலாவது தமிழ்ப் படத்தில் ஹீரோவாக நடித்துவிட்டு அப்பா வேஷத்துக்கென நிரந்தரமாக்கப்பட்டு இருப்பவர்.

இவர் அந்தப் படத்தில் நிஜமாகவே ஒரு ஹீரோவாகத் தோன்றியிருந்திருந்தால், இன்று ஒரு நிரந்தர கதாநாயகனாக ஆகி இருக்கலாம் இல்லையா? ஏன், 'பைலட் பிரேம்நாத்' படத்திலேயே சிவாஜியின் மகன்களில் ஒருவராக நடிக்கும் அளவுக்கு உயர்ந்து இருக்க

## நமது தயாரிப்பாளர்களே கதாநாயகர்களை அழிக்கிறார்கள்

'எக்ஸ்ரா' பாத்திரங்களில் நாங்கள் நடிக்க மாட்டோம்' என்று இரண்டு நடிகர்கள் அறிக்கைவிட்டு இருந்தார்கள்.

வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம், ஏற்றுக்கொள்கிறோம். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம்.

ஆனால்-

அதே வேளையில்-

லாம். ஆனால் அது ஏன் நடக்கவில்லை?

இந்த நிலைக்கு அவர்மட்டும்தான் காரணமா? இல்லை அவரது நடிப்பு சோடைபோனதுதான் காரணமா? இரண்டும் இல்லை. நமது படவுலகின் பரிதாப நிலைதான் காரணம்.

பாத்திரத்துக்குரிய கதாபாத்திரங்களாகவா இங்கு நடிகர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள் இல்லையே! பணம் போட்டதற்காக, பழகிய முகம் என்பதற்காக அல்லவா கதா பாத்திரங்கள் கொடுக்கிறார்கள்.

இது எல்லாவற்றிற்கும் மேலாக பணம் போட்ட பழிக்காகவே, தமது நடிப்பு பொருத்தமானதோ இல்லையோ கதாநாயகனாக நடித்து தீரும் நடிகர்கள் நமது நாட்டில் இருக்கிறார்களே!

இத்தனைக்கும், இவர்கள் கூட இந்திய நடிகர்கள் நம்மை ஒதுக்கி விடுகிறார்கள் என்றும், நமது கலைஞர்களை அழிக்க வந்து இருக்கிறார்கள் எனவும் கூப்பாடு போட்டு கூத்தடிப்பதைப் பார்க்க நல்ல வேடிக்கையாக இருக்கிறது.

இந்தியக் கலைஞர்கள் நம்மை வெறுத்து ஒதுக்கிறார்கள் என்று ஒப்பாரி வைப்பவர்கள், இப்படியான வேஷதாரிகளை எதிர்த்து போராட்டம் நடத்தினால் என்ன? அந்த எதிர்ப்புதான் முதலில் நம்மை வளர்க்கப் போகிறது என்ற





கணவன்: ஏம்மா, இன்னைக்காவது எனக்கு ஏதாவது கிடைக்குமா?

நடிகை: முடியாதுங்க.........இப்பதான் ஹீரோ கொடுத்த முத்தத்திலே உதடு வீங்கிப்போச்சு.........!

கணவன்: உதடு மட்டும்தானா... காசு வாங்கிட்டாயா?

நடிகை: அம்மா முன்னாடியே...... வாங்கிட்டா......!

---

# மூன்று கதாநாயகர்களை முறியடித்து விட்டார்கள்

உண்மை இவர்களுக்கும் புரியாமல் இருக்கிறதே!

கூட்டுத் தயாரிப்பு பற்றி திரு. வி. பி. கணேசனும் கூக்குரல் எழுப்பி இருக்கிறார். மன்னிக்கவும் கூக்குரல் அல்ல. கூலிக்குரல். ஆமாம்! அவருக்குப் படத்தில் கொடுக்கப்பட்டது கூலிக் 'குரல்' தானே!

கூட்டுத் தயாரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இவர், 'சிவாஜி கணேசனுக்கு நேர்மையாக கொடுக்கப்படும் பணத்திற்கு நடிக்கவருவாரா?' என்றும் கேள்வி எழுப்பி இருக்கிறாரே. இதன் அர்த்தம் என்ன? நேர்மையாக பணம் கொடுத்தால் நானும் நடிக்கவைப்பேன் என்பது தானே?

'பைலட் பிரேம்நாத்' படத்திற்காக சிவாஜி கணேசன் நேர்மையாகப் பணம் வாங்கித்தான் நடிக்கிறார் என்று சொன்னால் அதனை திரு. வி. பி. கணேசன் ஆமோதிப்பாரா, வரவேற்பாரா?

'இலங்கைக் கலைஞர்களின் உயர்வுக்காக பணம் நஷ்டப்பட்டாவது படம் தயாரிப்பேன்' என்று திரு. கணேசன் கூறுகிறார். நிச்சயமாக அந்தச் சாதனைக்காக, அவர் உயிரோடு இருக்கும்போதே சிலை எழுப்பப்படத்தான் வேண்டும். இந்தச் சிலையை இங்குள்ள கலைஞர்கள் மனதார, இதயபூர்வமாக, தூய மனதுடன் நிறுவ வேண்டுமானால் கதாநாயகர்களை அழிப்பதால் ஏற்படும் அவப்பெயரை அவர் அகற்றிக்கொள்ள வேண்டும்.

'புதிய காற்று' 'நான் உங்கள் தோழன்' ஆகிய இரண்டு படங்களிலும் இருவருக்குப் பதிலாக ஒரு 'ஹீரோ' தோன்றி இருந்திருந்தால் இந்த நாட்டுக்கு ஒரு 'ஹீரோ' இப்போது கிடைத்திருப்பாரா இல்லையா? இதற்கு யாராவது மனம் திறந்து பதில் சொல்வார்களா?

'நாம் யதார்த்த ரீதியில் படம் தயாரித்து சர்வதேச புகழ் பெறும் தகுதிபெற்றவர்கள்' என்றும் திரு. கணேசன் கூறுகிறார். ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அப்படிச் சொன்னவரே எம். ஜி. ஆர். பாணியில் படம் எடுத்து, நமது தனித்துவத்தைக் குழி தோண்டிப் புதைத்தது எதற்காக என்றும் கேட்டு வைக்கிறோம்

அடுத்து ஒரு படம்-

இது 'தென்றலும் புயலும்'

இந்தப் படத்திலும் கதாநாயகர்கள் தயாரிப்பாளர்களே! படத்தின் 'டிரெயிலரைப்' பார்த்துவிட்டே பொதுமக்கள் கத்துகிறார்கள். அதைக் கேட்டு குழந்தைகள் கூட தியேட்டர்களில் விறிட்டு அலறுகின்றன. இதையெல்லாம் விமர்சிக்க, எடுத்துச் சொல்ல எவர் இருக்கிறார்கள்.

கூட்டுத் தயாரிப்பால் நமது திரையுலகம் ஒழிந்துவிடப் போகிறது என்று சொல்லுகிறார்கள். அதைவிட, இந்தியப் படங்களின் வருகையால் நமது படவுலகம் பாதிக்கப்படுகிறதே! இது பற்றி என்ன சொல்லுகிறார்கள்? கூட்டுத் தயாரிப்புக்களின் மூலம் நமது கலைஞர்களுக்கு படிப்படியாக முன்னேற்றம் காத்திருக்கிறது. எனவே வீணே கூப்பாடு போட்டு, கூக்குரல் எழுப்பி, உங்கள் சக்தியற்ற தன்மையை பறை சாற்றிக் கொண்டு இருக்காதீர்கள்!

சற்றுப் பொறுமையாக இருந்து நிலைமையைப் பாருங்கள். அதற்கு முன், நமது படவுலகில் இருக்கும் குறைபாடுகளை அழிக்க முன்வாருங்கள். அப்போது, கூட்டு முயற்சிக்கு அவசியமே இல்லாமல் போய் விடும்.


'பைலட் பிரேம்நாத்' திரைப்படம் நமது கலையுலகுக்கு திருப்புமையமாக அமையாவிட்டாலும் பரவாயில்லை, நம்மை திருத்துவதற்கு, நமக்கு சில விஷயங்களைப் புரியவைப்பதற்கு வழிவகுத்தால் அதுவே போதுமானது.

—வணங்காமுடி

---




மலையாளப் படவுலகின் நிருத்திய சக்ரவர்த்தியாக விளங்கிவரும் நடிகர் பிரேம் நசீர் என்றும் பதினாறாகவே காட்சியளிக்கிறார்.



கராடே மாப்பிள்ள
சத்யாவுக்கு எப்போதுமே விசித்திரமான ஆசைகள் ஏற்படுவதுண்டு.. ஆனால் இப்போது விபரீதமான ஆசை ஒன்று ஏற்பட்டது. அது...
மணந்தால் ஒரு கராடே மாப்பிள்ளையைத்தான் மணப்பேன்.. அதுவும் கணேஷ்.
①
இதைக் கேள்விப்பட்டதும் அவளுடைய அப்பா ராமசாமிப் பிள்ளைக்கு உடனே தலைவலி ஏற்பட்டது. தன் மனே தங்கவேலுவை தலைவலி மாத்திரை வாங்க அனுப் விட்டு கவலையுடன் நின்றிருந்தார்..
②
ஐயையோ! கராடே கணேஷ் என் விரோதியாச்சே! கடவுளே! கணேசா! நீதான் துணை!
விஷயத்தைக் கேள்விப்பட்டா கராடே கணே
யோவ்! நான் உன் மகளைக் கல்யாணப் பண்ணுவதாக இருந்தால் நீ என்ே கராடே சண்டைக்கு வரணும்! வர்றியா?
இவ்வளவு தானே! சரி! ஆனால் ஒரு மாதம் தவணை கொடு..
③
என்ன இருந்தா சத்யாமீ எனக்கு காதல் தா
ஓய் மனேஜர்! ஒரு மாசத்தில் கராடே கற்றுக் கொள்ளலாம் என்றால் முடியாது போலிருக்கிறதே! அடேயப்பா! என்னமாய் அடித்துக்கொள்கிறார்கள்.
④
பரவாயில்லை முதலாளி! துணிஞ்சு இறங்குங்க. ஆனால் முதல்லே உங்க சொத்தை என் பெயரில் எழுதி வைச்சிடுங்க!
மனேஜர்! பேசாமே ஊரை விட்டே ஓடிப் போவோமா?
இல்லை முதலாளி! உங்க மகள் சத்யாவுக்கும் கராடே கற்றுக்கொடுக்கப் போவதாக அறிவித்து விடுங்கள்!
⑤
விஷயத்தை அறிந்த கணேஷ் திடுக்கிட்டான்.
ஐயையோ! சத்யாவின் பொன்னுடல் புண்ணாகிப் போய்விடுமோ! பேசாமல் கல்யாணத்துக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டியதுதான்!
மனேஜரின் தந்திரம் பலித்தது. கணேஷ் சத்யாவை திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்தான்.
யாவும் கற்பனையே
கீதா
நடித்தவர்கள்: ஜெய்கணேஷ்
சத்யப்பிரியா
வி.கே.ராமசாமி
தங்கவேலு.


அவனுடைய ஒவ்வொரு அடியும் வலிமை மிக்கது. தொடர்ந்து—
இந்தா!
ஜேன்! குதிரையில் ஏறு. எஸ்டேட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வருகிறேன்
ஐயையோ வேண்டாம்!
மலை அரசி
உங்களை அங்கே உயிரோடு விட மாட்டார்கள்!
பரவாயில்லை! உயிருக்கு அஞ்சாதவன் நான்!
அவனுடைய குதிரை மலை-அரசியை நோக்கி விரைந்து சென்றது.
மலை அரசியின் உரிமையாளரான பார்ன்ஸ் ஏற்கெனவே முன் கோபக்காரர் எனப் பெயர் எடுத்தவர். கொள்ளைக்காரன் எனப் பலராலும் நம்பப்பட்ட நீலனை அவருக்கு பிடிக்காது. இத்தனைக்கும் நீலன் ஒரு வெள்ளைக்காரத் துரையினால் வளர்க்கப்பட்டவன்.
மலை அரசியில் ஜேனை விட்டு விட்டு நீலன் திரும்பினான்.
QUEEN OF MOUNTAIN
ம்.. என்றாவது ஒருநாள் என்னை வரவேற்கத்தான் போகிறீர்கள்..
அப்பா நீலன் நல்லவர். அவரை எங்கள் எஸ்டேட்டின் உள்ளே வர அனுமதியுங்கள்.
முடியாது ஜேன்! அவன் கொள்ளைக்காரன்! ஆனால் உனக்காக அவனுக்கு ஒரு சலுகை அளிக்கிறேன்!
அவன் தன்னை நல்லவன் என்று நிரூபிக்கட்டும்!
நிச்சயம் அது நடக்கும் அப்பா!
என்றோ ஒருநாள் தன்னை மதிக்காது நடந்து விட்டான் என்பதற்காக பார்ன்ஸ் துரை நீலனை விரோதியாக நினைத்து நடக்க ஆரம்பித்தார்.
மலை அரசியில் நடைபெறும் கொலை, கொள்ளை ஆகியவற்றுக்கும் நீலன்தான் காரணம் என யாரோ கதை கட்டி விடவே இருவர் பகையும் வளர்ந்தது. பிரிட்டிஷ் படையினரும் நீலனை துன்புறுத்த ஆரம்பித்தார்கள். எனவேதான் அவன் நாடோடியாக அலைய ஆரம்பித்தான்.
சில நாட்களுக்குப் பின்-
ஒரு பிரிட்டிஷ் சிப்பாயை கொள்ளைக்காரர்கள் பிடித்து தூக்கில் தொங்க விட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது—
தூக்கில் போட்டதும் குதிரையை விரட்டி விடு!
என்ன நடைபெறுகிறது இங்கே!
நீலன்! இவன் எங்கள் எதிரி. நீ எங்கள் விஷயத்தில் தலையிடாதே!
மிகுதி அடுத்த இதழில்-

# கீதா குறுக்கெழுத்துப் போட்டி எண்-2

## ரொக்கப் பரிசு: ரூபாய் 50/-

(1) கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு தகுந்த பதில்களைத் தேர்ந்தெடுத்து கட்டங்களை நிரப்ப வேண்டும்.

(2) ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்பட வேண்டும். அழித்தல், அகற்றல், திருத்தல் ஆகியன இருக்கக்கூடாது.

(3) ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் அவைகள் குறிப்பிட்ட தேதியில் 'கீதா'வில் வெளிவந்ததாகவே இருக்க வேண்டும்.


(4) கூப்பன் அனுப்புபவரின் பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(5) திரு. சிதம்பரம் அவர்களின் தொழிலகங்களில் (வெஸ்பா பிரிண்டர்ஸ், யூனைட்டெட் இண்டஸ்ரீஸ், கிறசண்ட் என்டர்பிரைஸ், கீதா) வேலை செய்பவர்களோ, அவர்கள் சொந்தக்காரர்களோ கலந்து கொள்ள முடியாது.

ரொக்கப் பரிசு 50 ரூபாவாகும் பலர் பரிசு பெறும் பட்சத்தில் அவைகள் குலுக்கி எடுக்கப்படும்.
இப்போட்டியின் முடிவு ஆசிரியருக்கே உரியது.
பரிசு பெற்றவர்களுக்கு உடன் 'செக்' அனுப்பி வைக்கப்படும்.
கூப்பன்கள் தபால் அட்டையில் மட்டுமே ஒட்டப்பட வேண்டும். தபால் உறைமூலம் வருபவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
கூப்பன் அனுப்பவேண்டிய முகவரி; குறுக்கெழுத்துப் போட்டி, கீதா, வெஸ்பா பிரிண்டர்ஸ், 283, லாயிட்ஸ் பிராட்வே, கொழும்பு-14.

### கீதா குறுக்கெழுத்துப் போட்டி எண் -2

தயாரிப்பு: பெர்னண்டோ



திகதி 1-4-78

முடிவு திகதி 15-4-78

**இடமிருந்து வலம்:**

1. நடிகர் திலகத்தின் இரண்டெழுத்துப் படம்.
3. நாதஸ்வர வித்துவானின் மோகனம்பாள்.
6. மக்கள் திலகமும், பானுமதியும் சேர்ந்து நடித்த படம் குழம்பிக் கிடக்கிறது.
8. இலங்கையிலுள்ள ஒரு மாவட்டத்தின் பெயர்.
10. .... வந்தால் பத்தும் பறந்து விடும் என்பார்கள்!
12. தாயே உனக்காக படத்தில் பின்னணி பாடியவர்
15. மனித உறுப்புக்களில் ஒன்று மாறி இருக்கிறது.
16. சொந்தக் குரலில் ஆடி, பாடி நடித்த பாடகர்.
18. நட்சத்திரம்.
19. பெண்கள் நெற்றியில் போடுவது! குழம்பிக் கிடக்கிறது.


**மேலிருந்து கீழ்:**

1. காலஞ்சென்ற குணசித்திர நடிகர்.
2. பெருமை.
3. மஹாகவியின் பெயரைக் கொண்ட ஒரு நடிகை தலைகீழாக இருக்கிறாள்.
4. நெருப்புச் சூட்டினால் 'மூன்று' சுழியாகி விட்டது!
5. இந்தப் பறவை பேசும் என்று கூறுவார்கள்.
7. வேலையாள்.
9. சிலர் வேதனையில் அழுவதை இப்படிக் கூறுவர்.
11. வாழ்க்கையை வெறுத்தவர்களை இங்கே போகச் சொல்வார்கள்.
12. இது கிடைத்தால் எண்ணம் நன்றாக அமையும்.
13. தெரு.
14. மனைவி.
17. அரை.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கைகாரர்கள்
அனைவருக்கும் எமது தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்

அன்றாட பாவனைக்கும், அத்தியாவசிய தேவைக்கும்
உரிய சிறந்த பொருட்களை விநியோகிக்கும்
தலைநகரின் தலைசிறந்த நிறுவனம்

★



★ சுத்தமான தேங்காய் எண்ணெய்

★ சுகந்தமான சோப்புகள்

அத்தனையும்
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
கிடைக்கும்

★


பி. ஸி. ஸி. தயாரிப்புகள் அனைத்திற்கும் மொத்த

விநியோகஸ்தர்கள்

# V. T. V. Deivanayagam Pillai & Co.

37, 5TH CROSS STREET,

COLOMBO-11



'பைலட் பிரேம் நாத்' படத்தில் நடிக்கும் ஸ்ரீதேவியுடன், கீதா ஆசிரியர் தமிழ்நெஞ்சன்

**ஐ. எம். தமீம், எஸ். ஏ. காதர்.**
**கல்முனை.**

கே: பெண்கள்தான் குடும்பச் சண்டைக்கு காரணமா?

ப: ஏன்? சமாதானத்திற்கும் அவர்கள்தான் காரணம்!

**செல்வி வை. ராஜராஜேஸ்வரி,**
**நுவரெலியா.**

கே: பூத்துவிட்ட மலர்கள் எல்லாம் பூஜைக்குரியவை என்றால், பூமியில் பிறந்துவிட்ட பெண்கள் எல்லாம் ......?

ப: ஆசைக்குரியவர்கள்; ஆயிரங் காலத்துப் பயிர் என்று கூறப்படும் சம்சார வாழ்க்கைக்குரியவர்கள்!!!

**திருமதி மாலதி சுப்பையா,**
**கண்டி.**

கே; பெண்கள் கோபப்படுவது ஏன்?

ப: நினைப்பது நிறைவேறவில்லையென்றால் கோபம் வராமல் இருக்குமா, என்ன?

**என். எஸ். மயில்வாகனம்,**
**கெபித்திகொல்லாவ,**

கே: மலருக்குத் தென்றல் பகையானால் அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு, என் மனதிற்கு துணைவன் பகையானால்........?

ப: மீண்டும்.. ......மீண்டும்... . மீண்டும்.........துணைவன்தான் துணையாக வேண்டும். உங்கள் துயரைத்துடைக்க வேண்டும்... இதற்கு மட்டும் வேறொருவனை துணையாகக் கொள்ள முடியாது! இதனால்தான் மதுரையை ஆண்ட மன்னன் பாண்டியனின் வாழ்க்கைத்துணைவி கோப்பெருந்தேவியார் கண்ணகியைப் பார்த்து கீழ்க்கண்டவாறு கூறினார்...'தந்தை, தாய், சகோதரங்கள் இறந்திருந்தால், மன்னவனோ நானோ, மற்றவர்களோ உனக்குத் துணையாக இருந்திருக்கலாம் ... ! ஆனால் உன் கணவனுக்குப் பதிலாக நான் யாரை இருக்கச் சொல்வேன்.. !' என்றார். பார்த்தீர்களா தமிழ்ப்பண்பாட்டின் தத்துவத்தை!

**எஸ். செல்வம்,**
**பண்டாரவளை.**

கே. பெண்களின் மறைவிடம் எது?

ப: குளிக்குமிடம்!

கே; பெண்களின் அழகை எப்படியெப்படி ரசிக்கலாம்?

ப: ஆடையுடுத்தியிருந்தால் அகத்தின் அழகை முகத்திலே ரசிக்கலாம்! அறைக்குள் இருந்தால் 'அந்தப்புர' அழகையெல்லாம் அக்கு வேறு, ஆணி வேறாக அளந்தளந்து ரசிக்கலாம்; ஆழ்ந்து





அனுபவித்துச் சுவைக்கலாம்! முற்றும் துறந்த ஞானிகளே பெண்களின் அழகைக் கண்டு சொக்கிப் போயிருக்கிறார்களாம்! செல்வம் மட்டுமென்ன இதற்கு விதிவிலக்கா ?

யஸ்மின் காரியப்பர்,
கல்முனை.

உங்கள் நெஞ்சம் தமிழானால் எங்கள் நெஞ்சம் ........?

ப: பெண்களானால், கொஞ்சும் இனிய நெஞ்சம்.........! வஞ்சம் இல்லா மஞ்சம்! தஞ்சம் அடைய இனியேன் பஞ்சம்! என்னிடமில்லை வஞ்சம்!

ரஞ்சினி சரவணமுத்து,
வவுனியா.

கே: மறுபிறவி எடுத்தால் என்னவாகப் பிறப்பீர்கள்?

ப: மனிதனாக, மக்களுக்குச் சேவை செய்யும் தொண்டனாகப் பிறக்க விரும்புகிறேன்!

பூ. கிநேர்சந்திரன்,
கோப்பாய்.

கே. நீங்கள் ஒரு தமிழ்ப் படம் தயாரித்தால் ...?

ப: நானே கதாநாயகன் சந்தேகமில்லை .....! பணம் போடுவது நானாக இருந்தால்..... நிச்சயமாக நான்தானே கதாநாயகனாக நடித்தாகவேண்டும்!

பி. நாதன், என. பாலு.
பி லெட்சுமணன் கந்தகெதர.

கே: மக்கள் திலகம் எம். ஜி ராமசந்திரனுக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: எம். ஜி. ஆர் அரசியலிலே அதிக ஈடுபாடு கொண்டுழைப்பவர். ஏழை மக்களின் நலனில் இதயபூர்வமான நாட்டம் கொண்டவர். தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்து தமிழ் மக்களுக்கு தொண்டு செய்து வருபவர். சிவாஜி; நடிப்புலகின் ஏகச் சக்கரவர்த்தி. உலகத்து நடிகர்கள் ஒன்று திரண்டாலும் சிவாஜிக்கு ஈடுகொடுத்து நடிக்க யாராலும் முடியாது! சிவாஜி நடிப்புலகின் ஒரு சகாப்தம்!

ஆ. சுப்பிரமணியம்,
மாகஸ்தொட்ட.

கே: திருமணம் ஆனதும், கணவனைத் தனிக்குடித்தனம் நடத்தப் போவோம் என்று கூறும் பெண்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: 'தனிக் குடித்தனம்" தகாது என்று கூறமாட்டேன்! எந்த குடித்தனம் நடத்தினாலும் அதை 'நன்று' நடத்துங்கள் என்றுதான் கூறுவேன்!

கே: தெய்வீகக் காதல் என்பது யாது?

ப: திரைக் காதல், தியேட்டர் காதல், பஸ் காதல், 'பார்க்' காதல் என்று எத்தனையோவிதக் காதலைக் கண்டிருக்கிறேன்; கேட்டிருக்கிறேன். ஆனால் தெய்வீகக் காதலென்று நான் ஒருவிதக் காதலையும், இதுகாலவரைகண்டதில்லை; கேட்டதில்லை. ஒருவேளை அது...... தெய்வங்கள் புரியும் காதலோ...... .....?

அ செல்லத்துரை,
திருகோணமலை.

கே: முத்தக்காட்சி இடம்பெறுவது பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: எந்த நடிகனோ முத்தம் கொடுக்கிறான்! எந்த நடிகையோ, வாங்கிச் சுவைக்கிறாள்! எந்தத் தயாரிப்பாளனோ அதை விற்கிறான்! எவனெவனோ அந்தப் படத்தைக் காட்டி பணம் சம்பாதிக்கிறான்! இதனால் நமக்கென்ன லாபம்? என்ன சுகபோகம்? முத்தம் கொடுப்பவனுக்கும், வாங்கிச் சுவைப்பவளுக்குமல்லவா அந்த இன்பம் தெரியும்! நான் தமிழ்நாடு போகும்போது கமலஹாசனைச் சந்தித்து "முத்தம் கொடுப்பதால் கிடைக்கும் சுகம் என்ன!" என்று கேட்டு வந்து பதில் சொல்கிறேன்!

செல்வி இந்திரா பொன்னையா,
அப்கொட்.

கே: மலரும் மங்கையும் ஒரு சாதி! அப்படியென்றால் ...ஆண்கள்... ...?

ப: தேன் குடிக்கும் ஜாதி! தெரியாதா சேதி!

வீ. தேவ் ஆனந்தராஜா.
பண்டாரவளை.

கே: வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இலகுவான வழி எது?

ப: அயராத உழைப்பு, அன்புவழி, திடமான கொள்கை, நல்ல இலட்சியங்கள் ஆகியவை இருந்தால் போதும்! வாழ்க்கையில் சீக்கிரம் முன்னேறிவிடலாம்!

# ஜெயகாந்தனுக்கு ஜெயசீலன் எழுதுகிறார்

நடிகர் தேங்காய் சீனிவாசனுடன் சினிமா விமர்சகரும், எழுத்தாளருமான ஜோ. ஜீ. ஜெயசீலன். இவர் ஆறுமாத காலமாக தமிழ்நாட்டுச் சினிமா உலகைச் சுற்றி விட்டு அண்மையில் இலங்கை திரும்பினார்

மகா 'கனம்' ஜெயகாந்தன் அவர்களுக்கு!

'கனம்' என்ற சொல்லை எழுதும் போது, எனது சிங்கள நண்பர் ஒருவர் இதனை உச்சரிக்கும் முறையும் எனது ஞாபகத்திற்கு வந்தது. அந்த நண்பர் 'கனங்' என்று இதனை உச்சரிப்பார்.

இந்த இரண்டு சொல்லுமே உங்களுக்கும் பொருத்தமானவைதான். கனம், ஆமாம்! உங்களுக்கு தலைக் 'கனம்' அதிகம்தான்! இந்தத் தலைக் கனத்திற்குப் பலரும் பலவித காரணங்களைக் கூறுவார்கள். ஆனால் அந்த விளக்கங்களை நான் நிச்சயம் ஏற்றுக்கொள்ளவில்லை. இது உங்களுக்கு மகிழ்ச்சிதானே. உங்களுக்கு மயிர் அதிகமாக இருப்பதால்தான் தலைக்கனம் அதிகமாக இருக்கிறது. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் அல்லவா?

'கனங்' என்றால் சண்டித்தனம் என்று சிங்களத்தில் பொருள்படும். அந்த முரட்டுத்தனமும் உங்களிடம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே இந்தச் சொல்லும் உங்களுக்குப் பொருத்தமானது என்றே கருதுகிறேன்.

எனவே, நீங்கள் இப்போது கனம், கனங் தங்கிய ஜெயகாந்தன் என்ற பெருமையினைப் பெற்று விட்டீர்கள்!

உங்களை நான் 'செட்'டில் சந்தித்தபோது நீங்கள் என்னை நிறுத்தி வைத்தே பேசினீர்கள். அருகில் ஒரு நாற்காலி இருக்கவில்லை. அதனால்தான் நீங்கள் என்னை நிறுத்தி வைத்தே பேசினீர்கள். மரியாதைக்காவது ஒரு தடவை

" படவுலகினரைக் கண்டு தலைசொறியும் பொறுக்கிகளில் நானும் ஒருவனல்ல என்பதை ஜெயகாந்தன் உணர்ந்து கொள்ள வேண்டும். "



எழுந்திருப்பீர்கள் என்று பார்த்தேன். ஆனால் எழுந்திருக்கவில்லை. அதிக நேரம் நிற்பதற்கு உங்கள் உடம்பு இடம் தராது என்பது எனக்குத் தெரிந்ததுதான். அதனால் நான் கோபப்படவில்லை. சோஸலிஷம் போதிக்கும் நீங்கள் உங்கள் உடம்பைக் குறைப்பதற்கு உணவைக் குறைத்து ஏழைகளுக்கும் தானம் செய்தால் என்ன என்று எனக்குத் தோன்றியது. அதற்கு வழி தெரியாவிட்டால், யாராவது நடிகையிடம் 'அட்வைஸ்' கேளுங்கள். உடம்பைக் குறைக்கும் ரகசியத்தை அவர்கள் சொல்லித் தருவார்கள்.

நான் உங்கள் எதிராளிகளின் உளவாளியாக இருக்கலாம் என்று நீங்கள் அன்று சொன்னீர்கள். உளவு அறியும் அளவுக்கு நீங்கள் படப்பிடிப்பு அரங்கிற்குள் அப்படி என்ன அசிங்கத்தை செய்யப் போகிறீர்கள்? அப்படி நினைத்

தாலும் அந்தக் கூட்டத்தில் வாய்ப்பா கிடைக்கப் போகிறது?

ஒவ்வொரு நாளும் விதவிதமான ஆடைகள் அணிந்து வந்து யாரோ ஒரு நடிகையிடம் நீங்கள் அழகைகாட்டியதாகவும், அந்த நடிகை உங்களை விட உங்களைப் புகழ்ந்து வரும் ஒரு நடிகரின் அழகைப் பாராட்டியதாகவும், பலரும் பேசிக்கொள்வதால்தான் உங்கள் படப்பிடிப்பு அரங்க மறைப்பை நான் சந்தேகிக்க வேண்டி வந்தது.

இதைவிட உளவறிய படப்பிடிப்பு அரங்கிற்குள் என்ன இருக்கிறது?

நீங்கள் என்ன செய்கிறீர்கள்? யாரோ கண்டுபிடித்த சினிமாப் படத்தை, எல்லோரும் எடுப்பது போல எடுக்கிறீர்கள். அதே 'போர்மிளா' தானே! வேறு ஏதாவது விஷேசமாக செய்கிறீர்களா?

உங்களுக்கு ஒரு யோசனை!

தமிழகப் பத்திரிகைகளில் ஏதோ எல்லாம் எழுதுகிறீர்களே, இந்த உளவாளிகளைப் பற்றியும் ஒரு தொடர் எழுதினால் நன்றாக இருக்குமே!

'வாசகர்களுக்கும் எனக்கும் இடையில் தூதுவனாக இருக்க பத்திரிகையாளனுக்கு என்ன இருக்கிறது? நானே அவர்களை முற்றிலும் அறிந்தவன்?' என்பது போலவும் அன்று பேசினீர்கள்.

நான் துணிந்து சொல்லுகிறேன். நீங்கள் இன்னும் உங்கள் வாசகர்களைப் புரிந்து கொள்ளவில்லை. அப்படி புரிந்து கொண்டிருப்பீர்களானால் நிச்சயமாக தரமான வாசகர்கள் நிறைந்திருப்பதாக மதிப்பிடப்படும் தியாகராயநகர் தொகுதியில் 33 வாக்குகள் மட்டுமே பெற்று மண்ணைக் கவ்வி இருக்க மாட்டீர்கள்.

திரைப்படத் துறையில் கரை கண்டவர் போலப் பேசும் உங்களுக்கு அந்தத் துறையைப் பற்றி அதிகம் தெரியாது என்றும் நான் நினைக்கிறேன்.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' வெற்றி பெற்றதும், அந்த வெற்றிக்காக டைரெக்டர் ஏ. பீம்சிங்கை பலரும் பாராட்டியது உங்களுக்குப் பொறுக்கவில்லை;

'நான் திரைக் கதையையே எழுதிக் கொடுத்தேன். அதன்படி பீம்சிங் செய்தார்' என்று ஏதோ பிதற்றி இருந்தீர்கள்.

நீங்கள் திரைக்கதை எழுதியதை ஒப்புக்கொள்கிறேன். அதற்காக படத்தின் முழு வெற்றியும் உங்களைச் சார்ந்து விடுமா என்ன?

திரைப்படம் என்பது ஒரு கூட்டு முயற்சி. அந்த 'போர்மேலிடி' கூட தெரியாததால் தான் பீம்சிங்கின் சிறப்பை மறைக்கப் பார்த்து இருக்கிறீர்கள்.

பீம்சிங் இல்லாமல் நீங்கள் டைரக்ட் செய்த படங்களின் நிலையை மறந்து பேசியது மடமை இல்லையா?

'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தைப் பற்றி நடிகை லட்சுமி ஒரு விஷயத்தை வெளியிட்டிருப்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ? அந்த ரகஸியம் எனக்குத் தெரியும்.

இந்தப் படத்தில் வரும் ஒரு காட்சியில் நடிகை லட்சுமி தன்னைக்கைவிட்டு போனகணவருடன் தொலைபேசியில் பேசுகிறாராம். அந்தக் காட்சிதான் நடிகை லட்சுமிக்கு சிறந்த நடிகை பட்டத்தை வாங்கிக் கொடுத்ததாகப் படத்தைப் பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தக் காட்சியை படமாக்கும் போது நடிகை லட்சுமிக்கு எந்த வசனமும கொடுக்கப்படவில்லையாம். அவரையே பேசி, முகபாவத்தைக் காட்டி நடிக்கச் சொன்னார்களாம். அதனால் தான் அந்தக் காட்சி சிறப்புற அமைந்ததாகவும், அதுவே பரிசினைப் பெற்றுக்கொடுத்ததாகவும் கூறப்படும் ரகஸியத்தைப் பொய்யென நீங்கள் கூறுவீர்களா?

நானும் நீங்களும் ஸ்டுடியோவில் பேசிக்கொண்டதை வைத்து, என்னையே ஒரு 'கேரக்டராக' உருவாக்கி ஒரு சிறுகதையை 'ஆனந்த விகடனில்' எழுதி இருந்தீர்கள். அதில் ஒரு பகுதியில் உங்களைச் சிங்கம் என வர்ணித்திருக்கிறீர்கள், என்னை செய்திப்பொறுக்கி என்றும் குறிப்பிட்டு இருக்கிறீர்கள்.

சினிமா உலகில் இருக்கும் தலை சொறியும் பொறுக்கிகளில் இருந்து அப்பாற்பட்டவன் நான் என்பதை நீங்கள் இப்போது புரிந்து கொண்டு இருப்பீர்கள் என நினைக்கிறேன்.

நீங்கள் ஒரு சிங்கமாக இருக்கலாம். ஆனால் நானோ, சிங்கத்தின் கூண்டிற்குள் இருந்து வளர்ந்தவன். அதனால் உங்களைக்கண்டு பயப்படப் போவதில்லை.


இலங்கையிலும் எழுத்துத்துறையில் சிங்கங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குப் புரியாது. அதனால் ஒன்றைச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

எமது நாட்டில், திரு. எஸ். டி. சிவநாயகம் என்ற பெயரில் பத்திரிகை உலகச் சிங்கம் ஒருவர் இருக்கிறார். அந்தச் சிங்கத்தின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள்தான் நானும் திரு. தமிழ்நெஞ்சனும்.

அதன் காரணமாகத்தான் உங்களைப் போன்ற தலைக்கனம் மிக்க, செருக்கு கொண்ட சிங்கங்களின் அசிங்கங்களை எடுத்துச் சொல்கிறோம், எதிர்த்தும் நிற்கிறோம்! இந்தத் துணிவினை வளர்த்த எங்கள் சிங்கம் எங்கே, நீங்கள் எங்கே?

உங்களுக்கு ஒரு உண்மையையும் நான் இப்போது குறிப்பிட வேண்டும். உங்கள் கதைகளைப்பற்றி எத்தனையோ பேர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேனே தவிர படித்தது கிடையாது. அவ்வப்போது வரும் கட்டுரைகளைப் படிப்பதுண்டு, அவ்வளவுதான்! அதிலிருந்து உங்கள் உண்மை சொரூபத்தைத் தெரிந்து கொள்வேன்!

(தொட்டதை தொடருவோம் பகுதியில் மிகுதி)




கைகளை தட்டினேன். புதிய கிளவ்ஸ் அதிக சப்தத்தை ஏற்படுத்தி விட்டது.

ஒரு நிமிடம் ஓடிவிட்டது.

மீண்டும் ஒருமுறை கைகளை தட்டினேன். எயார்டாக்சி டிரைவருக்கு இப்போதுதான் என் சமிக்கை புரிந்தது போலும்.

டாக்சியின் ஸ்பிரிங் கதவுகள் திறந்து கொண்டன.

ஸ்டாண்டில் இருந்த மெஷினில் நான்கு ஷெல்லா நாணயங்களை திணித்து விட்டு, டாக்சியில் ஏறிக் கொள்கிறேன்.

'என்ன சார்... நியூஸ்பேப்பரா, டி. வியா' டிரைவர் தான் கேட்கிறான்.

'டி வி.'

டக் என்ற சுவிட்ச் ஒலியை தொடர்ந்து எனக்கு முன்னேயிருந்த டெலிவிஷனில் ஒளி பரவியது.

ஒரு பெண்
டாக்சி டவல்
வர்ண விளக்குகள்
வேகமாக ஓடும் கார்
விளம்பர வாசகங்கள்

'வேண்டாம் நிறுத்தப்பா' என்று கூறிவிட்டு சீற்றில் நன்கு சாய்ந்து அமர்ந்து கொள்கிறேன்.

'இன்னமும் நாலேகால் நிமிடத்தில் உங்கள் ஆபிஸுக்கு போய் விடலாம். அதுவரை இதை படியுங்கள்' பின்புறமாக ஒரு நியூஸ் பேப்பரை நீட்டிக்கொண்டே கூறுகிறான் டிரைவர்.

சுறுசுறுப்பானவன்தான்

பேப்பரை வாங்கி பார்க்கிறேன்.

இன்னமும் மூன்றேகால்... இல்லை மூன்று நிமிடங்கள் தான் இருக்கின்றன.

படுபோர்!

அடையாள அட்டையை கம்பியூட்டரின் வாயில் திணிக்கின்றபோது கதவுகள் திறந்து விடுகின்றன.

என்னுடைய ஏற்பாடுதான்.

விஞ்ஞானி மகானின் (நான்தான்) ஆராட்சிக் கூடத்திற்கு இவ்வளவு பாதுகாப்பாவது வேண்டாமா வாயிலை பார்க்கிறேன்.

கம்பியூட்டரின் மூலையில் இருக்கும் திரையில் எழுத்துக்கள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. (விஞ்ஞானி மகான்' என் பெயர்தான் நாள் முழுவதும் இப்படியே இருக்கும்)

எனது ஆராய்ச்சி சாலைக்குள் நுழைகின்றேன். காலடிகளை ஓரளவு வேகத்துடனேயே வைக்கின்றேன். (ஒரு கம்பியூட்டரின் அரைநிமிட தொழிற்பாட்டுக்கு எனது காலடிகளில் இருந்து வெளியாகும் சக்தி போதுமானது!)

ராபிட், ஜெமீ, ரிசீச் ..... ஒவ்வொரு கம்பியூட்டராக பார்த்தபடியே வருகின்றேன்..... எல்லாம் வேலை செய்கின்றன.

சுவிச் போர்ட்டை பார்க்கின்றேன். பச்சை விளக்கு எரிகின்றது.

'டப்'

சிவப்பு விளக்கு!

தடாலென திரும்பினேன். (ஒரு கம்பியூட்டரின் முக்கால் நிமிட தொழிற்பாட்டுக்கு சக்தி கிடைக்கும்!)

கம்பியூட்டர்கள் எதுவும் இயங்க வில்லை! இதென்ன பழுது .....என் மனதுக்குள் கேட்டுக் கொள்கிறேன்.

ராபட் கம்பியூட்டரில் (வயது போன கம்டியூட்டர்) டி. வி. லைட் தெரிகின்றது

'ராபட் ஏதோ சொல்ல முயல் கிறதா?'

'எமக்கு ஒரு புதியமனிதன் வேண்டும்!'

'We want a new man'

'கா கிமி நிய நமகலு'

தமிழ் (என்மொழி) ஆங்கிலம் (சர்வதேச மொழி) எல். பீ. பீ (கம்பியூட்டர் மொழி)

'புதிய மனிதனு.........எதற்கு?, ராபட்டின் தகவல் சேகரிக்கும் பகுதியில் நின்று கேட்கின்றேன்.

மௌனம்!

''உங்களுக்கு எதற்காக புதிய மனிதன் வேண்டும்''. மீண்டும் இரைகின்றேன். 'நான் உங்களுக்கு கூடுதலான வேலை கொடுத்தேனு? போதுமான அளவு சக்தி கொடுக்க வில்லையா...... எதற்கு புதிய மனிதன் வேண்டும்... நீங்கள் எல்லாம் என்னல் சிருஷ்டிக்கப்பட்ட கம்பியூட்டர்கள். 'மைவேர்ட் இஸ் லோ'

மீண்டும் மௌனம் — ராபட் ஏதோ சொல்ல அனுங்கியது போல தெரிந்தது.

''ராபட் வாட் யூ சே?''

''வீ வான்ட் ஏ நியூ மேன்!''

''வை?''

மௌனம்!

எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'சனியன் பிடித்த கம்பியூட்டர்கள்' மனதுக்குள் திட்டிக் கொண்டு சிவப்பு பட்டனை வேகமாக அமுக்கினேன்!

எரிச்சல்!

கம்பியூட்டர்களுக்கு சக்தி போவது நின்றது. நான் நிறுத்தி விட்டேன்.

எல்லா கம்பியூட்டர்களும் அமைதியாக இருக்கின்றன. அவற்றின் ஸ் ...ஸ்......ஸ்... ஒலிகூட இல்லை.

இப்போது என் மனதில் 'ஸ்ஸ்ஸ்' நன் யோசிக்கிறேன்.

இந்த தொழிற்சாலைக்கு சக்தி கொடுக்காமல் நிறுத்திவிட்டேன். இது எனக்குதானே நட்டம்? நாளொன்றுக்கு இருநூற்று எழுபத்தேழரை ஷெல்லாக்கள் நஷ்டம் ஏற்படும்.

பச்சை பட்டனை தட்டிவிட்டேன்.

மீண்டும் கம்பியூட்டர்களின் ஸ்...ஸ்...ஸ் .. ஒலி.

''எங்களுக்கு ஒரு புதிய மனிதன் வேண்டும்''

'வீ வோன்ட் ஏ ......'

கண்களை இறுக மூடிக் கொள்கிறேன். நான்தான் இவற்றை ஆக்கினேன். (அதற்குகிட்டத்தட்ட ஐம்பதினுயிரம் ஷெல்லாக்கள் செலவு) இவை இப்படி முரண்டு பிடிக்கின்றனவே......)

ஆத்திரம்

மீண்டும் பேச்சு (மன்னிக்கவும் இயந்திர குரல்) குரல் ஒலிக்கின்றது.

இப்போது ராபட் மாத்திரம் பேசவில்லை. பல குரல்கள் கேட்கின்றன. ஜெமீ ரசீர் அல்பி...... எல்லாம் சேர்ந்து கூறுகின்றன.

எமக்கு ஒரு புதியமனிதன் வேண்டும். உன்னைப் போல சுயநல நோக்குடன் பணம் சம்பாதிக்க எம்மை பயன்படுத்தும் மனிதன் எமக்கு வேண்டாம்.

'நான்தான் உங்களை ஆக்கினேன்' நான் கத்துகிறேன்

மீண்டும் இயந்திர குரல். 'எங்களை உற்பத்தி செய்ய நீ ஐம்பதினுயிரத்து இருபத்தேழு ஷெல்லீகளை செலவு செய்திருக்கின்ருய் அதைவிட நீ அதிகம் லாபம் பெற்றுவிட்டாய். நீ போட்ட முதல் உனக்கே திரும்பி வந்துவிட்டது. கம்பியூட்டர் தலைவனின் இருபத்தி நாலாவது சோஸலிச திட்டத்தின்படி இனி உனக்கு நாம் அடிமைகள் அல்ல.

என்னுள் கோபம் தலைதூக்குகின்றது.

'அதுதான் இன்றுமுதல் எமக்கு ஒரு புதியமனிதன் வேண்டும் என்று கோரினேம், புதிய மனிதன் நிச்சயம் உன்னைப் போல் இருக்கமாட்டான்'

'இந்தச் சனியன்களை இப்போதே தலைமுழுகிவிட வேண்டும். டேஞ்சர் பட்டனை அமுக்கினுல் எல்லாச் சனியங்களும் ஒழிந்துவிடும்'

எரிச்சல்

கோபம்

ஆத்திரம்

பின்னல் ராபட் ஏதோ பேசுகின்றது. நான் காதுகளை பொத்திக்கொண்டு டேஞ்சர் பட்டனை நோக்கி ஓடுகின்றேன்.

'உன் எண்ணம் எமக்கு புரிகின்றது. எங்களை நீ அழிக்க முடியாத சாதனத்தை நாங்கள் செய்து விட்டோம். டேஞ்சர் பட்டனை தொட்டதும் நீயே அழிந்துவிடுவாய். கம்பியூட்டர் தலைவனின் ஏழாவது சட்டத்தின் இரண்டாம் பிரிவுப்படி இது ஒரு நன்மை பயக்கும் கொலை'

ராபட் கூறியது என் காதில் கேட்கவில்லை.

நான் காதுகளை இறுகப் பொத்திக் கொண்டு டேஞ்சர் பட்டனை நோக்கி ஓடிக் கொண்டு இருக்கின்றேன்.


இதோ இன்னமும் இரண்டரை அடிதான் இடைவெளி இருக்கின்றது.

ஓடுகின்றேன்!


ஆத்திரம்–எரிச்சல்–கோபம்.

---


## பருப்பு புரோக்கர் மணியனுக்கு ஜெயசீலன் எழுதும் மடல் அடுத்த இதழில்



விஜயகுமார் கீதாவுக்கு
அளித்த பிரத்தியேக போஸ்




பிரம்ஆனந்த் கீதாவுக்காக.
அளிதத பிரத்தியேக போஸ்

படம்பிடிப்பு: திவம்



இனிக்கின்ற கொவ்வைச்
செவ்வாய்
அழைக்கின்ற நாகம்
துடிக்கின்ற கன்னம்
ரெண்டும் சொல்லட்டும் பாடம்
மழை முகில் கூந்தல்
கண்டேன்
மதிமுகம் தோன்றக்கண்டேன்
மனதிலே மஞ்சம் கண்டேன்
உறவாட வா!.

"நுவன் ரேணு"
சிங்களப் படத்தில்
மாலினி பொன்சேகா.
ஆனந்த விக்ரம.
இதன் இயக்குனர்:
மில்டன் ஜயவர்தன.




Registered as a Newspaper in Sri Lanka. Price in Malaysia & Singapore -/75 cents, India Rs. 1/75 and Sri Lanka Rs. 2/50. Printed and Published by E. Chidambaram, Proprietor,

ண்ணப்படம்.
மினி ஜயசிங்க



பைலட் பிரம்நாத் கதாநாயகி
மாலினி போன்சேகா

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தமிழ்-சிங்கள புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

உங்களுக்கு வேண்டிய எழுதுகருவிகள்
அப்பியாசக் கொப்பிகள்
மொனிட்டர் அப்பியாசக் கொப்பிகள்
மையூருத பேப்பர்கள், மடியாத பைல்கள்
பள்ளிக்கூடத்திற்கு தேவையான உபகரணங்கள்
மற்றும்
அச்சகத்திறகு வேண்டிய பொருட்கள்

அத்தனையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
வாங்குவதற்கு சிறந்த இடம்



# நாயகம் பிறதர்ஸ்

149, நான்காம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

தொலைபேசி: 28805

நாஞ்சில் பி. டி. சாமியின் நாடகமான 'கல்மனம்' நாடகம் தென்னாடெங்கும் சக்கை போடு போட்டுக் கொண்டிருந்த காலத்தில் 'டேய் இவர்தான் தேங்காய் தியாகராஜன்' என்று தெருவில் போவோரும், வருவோரும் என்னைச் சுட்டிக் காட்டிப் பேசுவார்கள்!

'கல்மனம்' நாடகத்தில் நடித்து விட்டு கால் நடையாக வீடு போய் சேருவேன். தெருவில் போகும் போதும், வரும் போதும் என்னை ஒரு சிலர் தான் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

'கல்மனம்' நாடகம் நூறுவது முறையாக மேடையேறிய போது அண்ணன் கே.ஏ. தங்கவேலு இந்த நாடகத்திற்கு தலைமை தாங்கினார். அந்த நேரத்தில் அவர் திரையுலகின் பிரபல நகைச்சுவைத் திலகமாக திகழ்ந்து வந்தார்!

எங்கள் நாடகத்திற்கு அவர் தலைமை தாங்க வருகிறார் எ று கேள்விப்பட்டு நான் பெருமகிழ்ச்சியடைந்தேன் என்னுடைய கதாபாத்திரமான 'தேங்காய் தியாகராஜன்' பாத்திரத்தை மிகவும் கச்சிதமாகச் செய்தேன்.

நாடகத்தில் நடித்த நடிகர்களைப் பாராட்ட வந்த அண்ணன் கே.ஏ.டி. அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசும் போது 'சீனிவாசன்' என்ற எனது ஒரிஜினல் பெயருடன் 'தேங்காய்' சீனிவாசன் என்று இணைத்து பேசினார்! அன்று முதல் நான் தேங்காய் சீனிவாசனாக மாறி விட்டேன்.

பத்து ஆண்டுகளாக நான் மேடை நாடகங்களில் நடித்து வந்தவன். 16 ஆண்டுகளாக திரையுலக அனுபவம் பெற்று வருபவன்.

எத்தனை தான் நாடக அனுபவமும், திரை அனுபவமும் பெற்றிருந்தாலும் பணத்திலும், பெயரிலும் நான் மிகச் சாதாரணமானவனாகவே இருக்கிறேன். என் வாழ்வில் ஏற்றமோ' இறக்கமோ இல்லை எனக்காக 'உயிர்' விடுவேன் என்று துடிக்கும் ரசிகர்களும் இல்லை!




300 படங்களுக்கு அதிகமாக நான் நடித்திருந்தாலும் மூப்பது ருபாய்க்கு அதிபதி என்று சொல்லிக்கொள்ள என்னால் முடியவில்லை.

இன்று என்னைத் தயாரிப்பாளர்கள் உருட்டி விளையாடுகிறார்கள். அதனால் நானும் அவர்கள் உருட்டுவதற்கேற்ப உருண்டு விளையாடிக் கொண்டிருக்கிறேன். சிலர் என்னைத் துருவித் துருவி எடுத்து விட்டு, சிரட்டையாக எறிந்து விடுகிறார்கள்!



நான் என் வாழ்க்கையில் தேன் மட்டும் குடித்து வாழ்ந்தவன் அல்ல, வேப்பம் எண்ணையும் குடித்து வாழ்ந்தவன். அதனால் தான் கசப்பும், இனிப்பும் என் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து கொண்டு வருகிறது.

'ஒரு விரல்' படம் தான் என்னைத் திரையுலகுக்கு அறிமுகப் படுத்திய படமாகும்! அந்தப் படத்தில் நான் நடிகனாக மட்டுமல்ல புரொடக்ஷன் மனேஜராகவும் இருந்திருக்கிறேன்.

'ஒரு விரல்' போஸ்டர்களைத் தெருத் தெருவாக ஒட்டியிருக்கிறேன். அந்தப் போஸ்டரில் 'என் படம்' இருப்பதைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்திருக்கிறேன் ஆரம்பக்காலம் படவுலக வாழ்க்கையை நினைத்து இப்பொழுது சிரிப்பேன்!

இன்று என்னுடன் இலங்கை வந்திருக்கும் பிரேம் ஆனந்த் 'ஒரு விரல்' படத்தின் கதாநாயகன் என்பது உங்களுக்கு தெரியுமா? இதைக் கேட்கும்போது உங்களுக்கே வியப்பாகயிருக்கிறது இல்லையா?

'பேசும் படம்' ஆசிரியர் சம்பத் குமார் எனக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறார். என் படங்களைப் பேசும் படத்தில் பிரசுரித்து நல்ல விளம்பரத்தைத் தேடித் தந்தார். அவர் தந்த ஆதரவினால்தான் மாடர்ன் தியேட்டர் சுந்தரம் எனக்கு 'வல்லவன் ஒருவன்' படத்தில் நிலையான ஓர் இடத்தை ஏற்படுத்தி தந்தார்.

ஆரம்பத்தில் நான் நடிக்கப் போனபோது என்னைக்கண்டு முகம் சுழித்த நடிகைகள், இன்று என்னுடன் நடிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்! அன்று என்னை மிதித்த நடிகைகள் இன்று என்னை துதிக்கிறார்கள்; மதிக்கிறார்கள்! 'சூட்டிங்கில்' சும்மா நேரங்களில் ஜோக் சொல்லுங்களேன் என்று துளைத்து துளைத்துக் கேட்கிறார்கள்!

(தொட்டதை தொடருவோம் பகுதியில் மிகுதி)



# துரத்தும் துப்பாக்கி

## மொழிவாணன்

தர்மலிங்கத்தின் தலைமறைவை யும் சுந்தர்ராஜின் கொலையையும் ஒன்றோடொன்று இணைக்கக்கூடிய ஒரு சாட்சி சார். ராஜின் இரகசிய டிராயரில் இருந்த கடிதங்களும் புகைப்படமும் தர்மலிங்கத்தின் மனைவி ராணி தர்மலிங்கத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ சுந்தர் ராஜுடன் தொடர்பு வைத்திருக் கிறாள். இந்த செய்தி கிடைத்த தும் மேலும் பல சிக்கல்கள் ஏற் பட்டன.

D. L. என்ற பெயரில் கடிதம் அனுப்பி படத்தை காட்டி சுந்தர் ராஜிடமிருந்து பணம் பறித்த அந்த மர்ம மனிதர் யார்?

எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து பார்க்கும்போது தர்மலிங்கம்தான் குற்றவாளியாகக் காணப்பட்டான்.

சுந்தர்ராஜ் ராணியுடன் கள் ளத் தொடர்பு வைத்திருந்ததினால் ஆத்திரமடைந்த தர்மலிங்கம் சுந் தர்ராஜைக் கொலை செய்திருக் கலாம்!

அப்படியானால் ஜெயராஜைக் கொலைசெய்தது யார்? அந்த குற் றத்தையும் தர்மலிங்கத்தின் தலை யில் போடலாம்! சுந்தர்ராஜ் ராணி இருவரின் தொடர்பை அறிந்து கொண்ட ஜெயராஜ் தர்மலிங் கத்தை வேலைநீக்கம் செய்திருக்க வேண்டும். இதனால் ஆத்திர மடைந்திருந்த தர்மலிங்கம் ஜெய ராஜை கொலை செய்திருக்கலாம்!

ஆனாலும் இவை எல்லாவற்றை யும் நிரூபிப்பதற்கு போதுமான அத்தாட்சிகள் இல்லை.

எது எப்படியிருந்தாலும் சுந்தர் ராஜிடம் பணம் பறித்து வந்த வனும் கொலைகாரனும் ஒரே நப ராகத்தான் இருக்கவேண்டும் என்று மார்த்தாண்டன் முடிவு செய்தார். தர்மலிங்கத்தைக் கண்டு பிடிக்கும் வரையில் எதையும் கண்டுபிடிக்க முடியாது என்பதை புரிந்து கொண்ட இன்ஸ்பெக்டர் மார்த் தாண்டன் அவனது புகைப் படத்தை எல்லா பொலிசுக்கும் அனுப்பிவிட்டு பத்திரிகைகளிலும் வெளியிடுவதற்கு முடிவுசெய்தார்.

தர்மலிங்கத்தின் புகைப்படத்தை எல்லா பத்திரிகைகளிலும் வெளி யிட்டு இரண்டு நாட்களாகியும் எந்தவிதமான தகவலும் கிடைக்க வில்லை. மூன்றும் நாள் இரவு அலு வலகத்தில் அமர்ந்திருந்த இன்ஸ் பெக்டர் மார்த்தாண்டனுக்கு டெலிபோனில் ஒரு செய்தி வந் தது. வெள்ளவத்தை ஸ்டேஷன் ரோட்டில் வசிக்கும் பேராசிரியர் குமாரசாமியின் மனைவி துப்பாக்கி யால் சுட்டுக் கொலை செய்யப்பட் டாள் என்ற செய்திதான் அது. மார்த்தாண்டன் சார்ஜன் ராம் குமாரையும் அழைத்துக்கொண்டு விரைந்து அங்கே சென்றார்.

அங்கே கொலை செய்யப்பட்டுக் கிடந்த பெண்ணைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் மேலும் அதிர்ச்சி யடைந்துவிட்டார்!

ஜெயராஜ் குடும்பத்தில் ஒரே பெண் சகோதரியாகிய குலசேகரி தான் கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள். பரிசோதனைகளை முடித் துக்கொண்ட மார்த்தாண்டன் பேராசிரியர் குமாரசாமியைக் கேள்வி கேட்க ஆரம்பிக்கும்போது நடு இரவாகியிருந்தது.

''உங்கள் மனைவி துப்பாக்கியால் சுடுபடும்போது எத்தனை மணி யிருக்கும் மிஸ்டர் குமாரசாமி?''

''11-45.''

''இந்த நேரத்தில் நீங்கள் எங்கே சென்று வந்தீர்கள்?''

''சவோய் தியேட்டருக்குப் படம் பார்க்கச் சென்றிருந்தோம் இன்ஸ்

பெக்டர். படம் 11-30க்கு முடிவடைந்தது. அதன் பிறகு இருவரும் நேராக வீட்டிற்கு வந்தோம். குலசேகரி வீட்டின் முன்னால் இறங்கிக்கொண்டதும் நான் கரை கராஜில் போட்டு வருவதற்குச் சென்றேன்......அப்போதுதான் வெடிச் சத்தம்கேட்டது ...சத்தம் கேட்ட உடனேயே நான் காரில் இருந்து இறங்கி ஓடிவரும்போது இரண்டாம் முறையும் சத்தம்கேட்டது... நான் வரும்போது குலசேகரி கதவருகில் சூடுபட்டு விழுந்து கிடந்தாள்......நான் டாக்டருக்குப் போன் செய்துவிட்டு வரும்போது அவள் பிணமாகக் கிடந்தாள் இன்ஸ்பெக்டர்.... !''

''துப்பாக்கியால் சுட்டது யார் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா... ?''

''நான் காரில் இருந்து இறங்கி வரும்போது இருவர் ஓடுவதைக் கண்டேன்.........அதில் ஒருவனைத் தான் என்னால் நன்றாக காணமுடிந்தது......அவன் சாரம் உடுத்தி கட்டையாக இருந்தான். அவனது தலைமயிரும் கட்டையாக வெட்டப்பட்டிருந்தது ....மற்றவன் கால்சட்டை போட்டிருந்ததைப் போல்தான் நான் கண்டேன்!''

''அந்த இருவரில் உங்கள் மனைவியைச் சுட்டது யார்?''

''அதை நான் காணவில்லை இன்ஸ்பெக்டர்.''

''குலசேகரி சூடுபட்டு தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்ததும் எனக்கு மயக்கமே வருவதுபோல் இருந்தது. நான் அவர்களின் பின்னால் ஓடாமல் குலசேகரியிடம் ஓடிச் சென்றேன். அப்போது கார் ஒன்று விரைந்து செல்லும் சத்தம்தான் எனக்குக் கேட்டது.''

''அந்த குள்ளமான மனிதனை நீங்கள் இதற்கு முன்பு பார்த்திருக்கிறீர்களா?

''இல்லை இன்ஸ்பெக்டர். ஆனால் நான் ஸ்டேசன் ரோட்டில் காரைத் திருப்பும்போது அங்கே ஒரு மொரிஸ்மைனர் கார் நின்றது. அந்தக் காரின் பானட்டைத் திறந்து கொண்டு ஒரு மனிதன் ஏதோ செய்து கொண்டிருந்தான். அந்த மனிதனும், இங்கே இருந்து ஓடிய கட்டை மனிதனும் ஒருவனாகத்தான் இருக்கவேண்டும்!''

''அந்த கார் நிறுத்தியிருந்த இடத்திற்கும் உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரமிருக்கும்?''

''சுமார் நூற்றி ஐம்பது யார் தூரமிருக்கும்!''

நீங்கள் அந்த இடத்தில் இருந்து வந்து காரை கராஜினுள் போடுவதற்கு எத்தனை நிமிடங்கள் பிடித்திருக்கும்?

''சரியாகச் சொல்லத் தெரியாது... ஆனால் ஐந்து நிமிடங்களுக்கும் குறைவாகத்தான் இருக்கவேண்டும்!''

''சரி ஐந்து நிமிடங்கள் என்று சொல்லுவோம்.... இந்த ஐந்து நிமிடங்களில் அந்த காரின் அருகில் இருந்த மனிதனுக்கு உங்கள் வீட்டிற்கு ஓடிவந்திருக்க முடியுமா...?''

''முடியாது இன்ஸ்பெக்டர்...... அவன் காரின் பின்னால் ஓடிவந்திருந்தால் அது எனக்குத் தெரிந்திருக்கும்!''

''உங்கள் தோட்டத்தில் இருந்து ஓடிய இருவரும் ஒரு காரில ஏறிப் போன சத்தம் கேட்டதாகச் சொல்லுகிறீர்கள். அவர்கள் ஸ்டார்ட்டாக்கியிருந்த காரில் ஏறினார்களா.... நீங்களும் ஒரு டிரைவர் என்பதனால் இந்த வித்தியாசம் உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன்!''

''ஆமாம்...... ..இன்ஸ்பெக்டர் ஏற்கனவே ஸ்டார்ட்டாகியிருந்த காரில் தான் அவர்கள் போயிருக்கிறார்கள் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். அவர்கள் காரை ஸ்டார்ட்டாக்கிக்கொண்டு போயிருந்தால் அந்த சத்தத்தை என்னால் புரிந்துகொண்டிருக்க முடியும் இன்ஸ்பெக்டர்.''

''நீங்கள் எவர்மீதாவது சந்தேகிப்பது..... !''

''குலசேகரிக்கென்றால் எதிரிகள் எவருமே இல்லை......எனக்கு இருந்தாலும் அவர்கள் ஏன் என் மனைவியைச் சுடப்போகிறார்கள்!''

''ரோட்டில் காரை நிறுத்திக் கொண்டிருந்த மனிதனையும் தோட்டத்தில் இருந்த மனிதனையும் மீண்டும் கண்டால் உங்களால் அடையாளம் புரிந்துகொள்ள முடியுமா?''

''முடியும் என்றுதான் நினைக்கிறேன்?''

''அந்தக் காரின் இலக்கங்களை நீங்கள் பார்க்கவில்லையா?''

''இல்லை.''

கேள்விகளை அத்துடன் நிறுத்திக் கொண்ட மார்த்தாண்டன் வாடிய முகத்துடன் திரும்பினார். இந்த கொலையைப்பற்றி நாளை பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளைப் பற்றி எண்ணும்போது அவருக்கு கொஞ்சம் நடுக்கமாக இருந்தது. கொலைகாரன் எவ்வித சிரமமுமன்றி மூன்றாவது கொலையையும் செய்து விட்டான்.........ஆனாலும் பொலிசாரால் இன்னமும் கொலைகாரனைக் கண்டு பிடிக்க முடியாதிருந்தது. தனது பெயர் நாளையில் இருந்து பத்திரிகைகளில் பலமாக அடிபடப் போகிறது என்பதை எண்ணிய போதுதான் இன்ஸ்பெக்டரின் உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்தது.

உண்மையிலேயே கொலைகாரன் நல்ல திறமைசாலிதான் என்பதை மார்த்தாண்டன் ஒப்புக்கொண்டார். இதுவரை அவன் செய்திருந்த கொலைகள் எல்லாவற்றையும் திட்டமிட்டு மிகத் திறமையாகவே செய்து முடித்திருந்தான். எந்த ஒரு சிறு தவறையும் அவன் செய்யவில்லை. அவனது கைரேகையைக் கூட அவன் ஓர் இடத்திலும் விட்டுச் செல்லவில்லை. கொலைகாரன் யாராக இருந்தாலும் அவன் இரண்டு குள்ளமான மனிதர்களின் உதவியை நாடியிருக்கிறான்.

(தொடரும்)


கவர்ச்சியைக் காட்டி இளம் உள்ளங்களைக் கிளுகிளுக்க வைக்க வேண்டுமென்பதே இன்றைய இளந்தலைமுறை நடிகைகளின் குறிக்கோளாக இருந்து வருகிறது!

'முத்தம் கொடுத்து மட்டுமா, நிர்வாணக்கோலத்திலும் நடிப்போம் என்று சவால் விடும் நடிகைகள் பலர் நீயா, நானா என்று போட்டி போட்டுக் கொண்டு சினிமாவுலகில் நடிக்க வருகிறார்கள்!

இவர்களில் முன்னணியில் திகழ்ந்து, இன்று திரைக்கு முன்னும், பின்னும் வாழும் நடிகைகள் ஏராளம்!

குணசித்திர நடிகைகளாகவும், கவர்ச்சி நடிகைகளாகவும் அறிமுகமாகமான சிலரின் பட்டியல் இதோ:-

கே. ஆர். விஜயா, ஜெயலலிதா, விஜயலலிதா, ஸ்ரீலலிதா, ஜெய்குமாரி, ஜெயமாலினி, ஜெயந்தி, ஜெயலட்சுமி, ஜோதிலட்சுமி, 'ஜீவனும்சம் லட்சுமி' ஜெயசுதா, ஜெயசித்ரா, ஜெயபாரதி, ஜெயஸ்ரீ, ராஜஸ்ரீ, கீதஸ்ரீ, மஞ்சுளா, சந்திரகலா, லதா ஆகிய பல நடிகைகள் ஒவ்வொரு வகையில் தங்களின் கவர்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்,



நடிகை கனகதுர்க்கா 'நெல்லு'வில் இப்படித் தோன்றுகிறார்.



நடிகை சங்கீதாவின் படுகவர்ச்சி

## சங்கீதா கவர்ச்சியாக நடிக்கத் தயாரா?

அந்தக் கவர்ச்சி பற்றி நடிகை சங்கீதா இப்படிக் கூறுகிறார்:-

''கவர்ச்சி கலையம்சத்துடன் இருக்க வேண்டுமே தவிர நிர்வாணக் கோலத்தோடு இருக்கக் கூடாது,

நாம் எதைப் பார்க்கப் பிரியப்படுகிறோமோ, அது மூடியும் மூடாமலும், திறந்தும், திறக்காமலும் காட்டியும், காட்டாமலும் இருக்கிறதோ அது தான் அழகு. அதுதான் கவர்ச்சி என்று சொல்லப்படுகிறது! அப்படிப்பட்ட 'கவர்ச்சி'ப் பாத்திரங்களில் நான் நடிக்கத் தயார்.

நான் நடிப்புக்காக எதையும் செய்வேன்! என்னுடைய தொழிலே நடிப்பாக இருப்பதனால் ரசிகர்களைத் திருப்திபடுத்தும் அளவுக்கு நான் நடித்தாக வேண்டுமல்லவா? என்று கூறுகிறார் நடிகை சங்கீதா!



# சுமித்ரா அடிக்கடி வழுக்கி விழுவது ஏன்?

'மல்ஸ்யகந்தி' என்ற மலையாளப் படம் தான் சுமித்ராவின் திரையுலகப் பிரவேசத்திற்கு முதன் முதல் அடிகோலிய படமாகும்!

சுமித்ரா நடித்த இரண்டாவது படமான 'நிர்மால்யம்' ஜனாதிபதியின் பரிசைப் பெற்றது.

சாதாரண படமாக நினைத்திருந்த 'நிர்மால்யம்' ஜனாதிபதியின் பரிசைப் பெற்றதைக் கண்டு பெருமைப்பட்ட சுமித்ராவுக்கு மலையாளப்படவுலகில் ஒரு மவுசு ஏற்பட்டது. ஆனால் அந்த 'மவுசு' அவருக்கு பெரிய 'மார்க்கெட்டை' ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியனவாக அமையவில்லை. ஆனால், சுமித்ரா என்றொரு நடிகை கேரளப் படவுலகில் இருக்கிறார் என்று ஜனங்களும் பிரபல பத்திரிகைகளும், படவுலகத்தினரும் தெரிந்து கொள்வதற்கு வழி ஏற்பட்டது.

'நிருத்தசாலா' என்ற படம் தான் மக்களை இவர் பக்கம் திருப்புவதற்கு ஒரு முனையாக அமைந்தது.

இத்தனை படங்களில் நடித்திருந்தும் சுமித்ராவுக்கு ஒரு நிலையான புகழோ, பெயரோ ஏற்படவில்லை. அதனால் தான் தமிழ்நாட்டுப்படவுலகுக்கு வந்தார்.

அங்கே-

பல பட நிறுவனங்களில் ஏறி இறங்கினார்.

பல டைரக்டர்களைச் சந்தித்தார் பல வகையான 'கவர்ச்சி'த் தோற்றங்களில்படங்களை எடுத்தார். சினிமாவுலகில் 'பிரபல'மானவர்களைச் சந்தித்தார். சினிமாவுலகில் நுழைவதெப்படி என்பதைப்பற்றிச் சிந்தித்தார்,

எத்தனையோ முயற்சிகளுக்குப் பின்னர் கதாசிரியர் குகநாதனைச் சந்தித்து, அவர் படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமானார்.

காட்ட வேண்டிய கவர்ச்சிகளைக் காட்டி, எடுக்க வேண்டிய விதத்தில் தொடை, இடை தெரியும் படங்களையெடுத்து, எப்படியும் நடிப்பேன் என்ற உறுதியைக் கொண்ட சுமித்ராவை திரையுலகிக்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் டைரக்டர் துரையாகும்!

'அவளும் பெண்தானே' என்ற படத்தில் நடித்ததின் மூலம் தமிழ் நாட்டு ரசிகர்கள் மத்தியில் பிரபலமாகி இன்று தமிழ்த் திரையுலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டவர் நடிகை சுமித்ரா,

இவர் ஏற்றுக் கொள்ளும் கதாபாத்திரங்கள் அத்தனையும் வாழ்க்கையில் வழுக்கி விழும் வனிதையர்களின் பாத்திரமாகவே இருக்கிறது. அந்தப் பாத்திரத்தின் மூலம் தான் இவரால் சோபிக்க முடிகிறது என்பதைப்புரிந்து கொண்ட சில படத் தயாரிப்பாளர்கள் 'வழுக்கி விழும்' பெண்களின் பாத்திரங்களிலே நடிப்பதற்கு சுமித்ராவை அழைக்கிறார்கள்!

இளமையும், கவர்ச்சியும் கொண்ட துடிதுடிப்பான நடிகையான இளமை முதன் முதலில் 'தேவி கருமாரியம்மன்' படத்தில் கே. ஆர். விஜயா அறிமுகப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

'அவளும் பெண் தானே', 'புவனா ஒரு கேள்விக்குறி' ஆகிய படங்களில் நடிகை சுமித்ரா வாழ்க்கையில் வழுக்கி விழுந்த வனிதையாக நடித்து, நல்ல புகழைச்சேர்த்திருக்கிறார்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தமிழ்-சிங்கள புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

பேப்பர், பைல்கள், அச்சுக்கு வேண்டிய நிந்தைகள், மற்றும்
ஸ்டேசனரி உபகரணங்கள் அத்தனையும் மொத்தமாக கிடைக்கும்
தலைசிறந்த ஸ்தாபனம்



# சிலோன் ஸ்டேசனரிஸ்

தொலைபேசி
24612

108, பிரின்ஸ் வீதி,
கொழும்பு-11.



# எம். ஜி. ஆர். நடிக்க வருவதில் யாருக்கு மகிழ்ச்சி!

தமிழ்நாட்டு முதலமைச்சரும், நடிகருமான எம். ஜி. ராமச்சந்திரன் மீண்டும் திரை உலகப் பிரவேசம் செய்யப் போகிறார் என்றது எம். ஜி. ஆர். ரசிகர்களைவிட, நடிகை லதாவுக்குத்தான் அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் மூன்று மாதங்களில் முதலமைச்சர் எம். ஜி. ஆர். ''அப்படி நடித்தார்'' ''இப்படி நடித்தார்!'' ''லதாவைக் கட்டிப்பிடித்தார்! ''வில்லன்களுக்கு கும்கும் கொடுத்தார்! என்ற செய்திகள் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளை நிறைக்கப் போகின்றன.

பகலில் முதலமைச்சராகவும், இரவில் நடிகராகவும் எம் ஜி. ஆர். இருக்கப் போகிறார் என்ற செய்தி எம் ஜி. ஆர். ரசிகர்களுக்கு இனிப்பாக இநக்கப் போகிறது.

முதலமைச்சராக இருக்கும் எம். ஜி. ஆர். மீண்டும் நடிக்க வருவது முதலமைச்சர் பதவிக்கு மாசுகற்பிப்பதாக அமையும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்லி வருகிறார்கள்.

எம். ஜி. ஆர். இவர்கள் பேச்சைக் கேட்கமாட்டார் என்று அவரது சக நடிகர்களும், ரசிகர்களும் சொல்லி வருகிறார்கள்.



சிலை
திடீரென்று-
அவன் பாய்ந்து கப்பலுக்குள் வந்தான்.
கப்பலுக்குள் வந்ததும்-
ஆ!
நாத முந்திக் கொண்டான் தொடர்ந்து-
கொள்ளைக்காரர்கள் அனைவரும் கப்பலுக்குள் வந்து விடவே நாத-லோதவின் கப்பல் நிறைந்து விட்டது-
இருவரையும் வெட்டிச் சாயுங்கள்.
ஆனால் நாத-லோத முந்திக் கொண்டார்கள்.
பிடி அவனை! விடாதே!
நாத விடு விடென்று பாய்ந்து கொள்ளைக் காரர்களின் கப்பலுக் குள் தாவினான்.
தொடர்ந்து லோதவும் தாவினான்.
தொடர்ந்து-

# இளைய தலைமுறையின் இனிய நாயகன்

ஈழத் தமிழ்ப் பத்திரிகை உலகின் ஒரே ஒரு விண்வெளி விஞ்ஞான எழுத்தாளர்.

மேற்கொண்ட பணியில் -உதவி சட்ட வைத்-திய அதிகாரி.


கலை உலகில்- -நடிகர். "வாடைக்காற்று" படத்தில் இரண்டாவது கதாநாயகன். இன்னும் பல பெருமைகளை கொண்ட இளைய தலைமுறையின் நாயகன் எல்லா-ருக்கும் இனியவரான டாக்டர் இந்திரகுமார்

இவருடைய கதைவசனத்தில் உரு-வாகப்போகும் புதிய படம்- "அன்றொரு நாள்"


இப்படத்தின் நாயகனும் இவர்தான்








சோவியத் அரசின் அழைப்பின் பேரில் ரஷ்ய சென்ற டாக்டர் இந்திரகுமார் அந்நாட்டு விண்வெளி கேந்திர மொன்றில் அம்புலி சென்று மீண்ட ஒரு விண் கலத்துடன் காணப்படுகிறார்.



'வாடைக்காற்று' படத்தில் ஆனந்தராணியுடன்.

1973ல் கொழும்பில் இலங்கைத் தமிழ்த் திரைப்-பட விழாவொன்றை ஒழுங்கு செய்த டாக்டர் இந்திரகுமார் "மஞ்சள் குங்குமம்" படம் வெளியீட்டின் போது டைரக்டர் எம்.வி.பாலன் நடிகை ஹெலன்குமாரி ஆகியோருடன்





நடிகர்திலகம் சிவாஜி கணேசன் டாக்டரின் கதையில் லயித்துப் போய் நிற்கிறார்.

● டாக்டரின் குணச்சித்திர நடிப்புக்கு இன்னொரு மைல் கல்லாக அமையப் போகும் படம், அவர் கதாநாயகனாக நடிக்கும் 'அவள் ஒரு ஜீவநதி',

**செல்வி ஃபெமீலா லதீப்,**
**புசல்லாவ.**

கே: பெண்களுக்கு நகை மோகம் ஆண்களுக்கு எதில் மோகம்... ?

ப: பெண் மோகம்!

கே: காதலில் தோல்வியுற்றவன் கவிஞனுகிறுன். காதலில் வெற்றி பெற்றவன்...... ?

ப: காதற் கன்னியைக் கட்டியணைத்துக்கொண்டு கட்டிலில் புரளுவான், உருளுவான்!! கட்டிலில் கண்ட வெற்றியை மனைவி பெற்றுவிட்டால் தொட்டிலைக் கட்டுவான்! தாலாட்டுப் பாடுவான்!

**செல்வி கல்யாணி வேலாயுதம்**
**பிலியந்தலை.**

கே: பிரேம் நசீரது தம்பியா பிரேம் ஆனந்த்?

ப: இல்லை! பிரேம்நசீரின் தம்பி பிரேம்நவாஸ். பிரேம்ஆனந்த் 'ஒரு விரல்' படத்தின் மூலம் அறிமுகமானவர். 15 வருடங்கள் படவுலகிலிருந்தும் கதாநாயகனுக நடிக்க முடியாமல் தவிக்கிறுர். பிரேம் நசீருக்கும், பிரேம்ஆனந்துக்கும் ஒரே ஒரு விஷயத்தில் ஒற்றுமையுண்டு. இருவரும் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள். நடிகர் பிரேம் ஆனந்தின் பெயர் அமீர்.

கே: முன்பு படங்களில் நடித்த பேபி ஷகிலா ஏன் தற்போது படங்களில் நடிப்பதில்லை?

ப 'சான்ஸ்' கிடைக்கவில்லை, அதனுல் நடிக்கவில்லை!

**எஸ் கணேசன்,**
**கொழும்பு-7.**

கே: உங்களுக்கு எதைப் பார்த்தால் பிடிக்காது?

ப: எனக்குப் பிடிக்காதவை எத்தனையோ உண்டு. ஆனுல் அவைகளில் மூன்றே மூன்றை மட்டும் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். ஏறக்குறைய உங்களுக்கும் அவைகள் பிடிக்காது என்று நினைக்கிறேன். படித்துப்பாருங்கள்.

ஒன்று:-

வீதியோரத்திலே, பகல் நேரத்திலே குழாயடியில் நின்று குளித்துக் கொண்டிருக்கும் குமரிப் பெண்கள் தமது மார்பிலிருந்து தொடை வரை கட்டிக் கொண்டிருக்கும் துணித் துண்டை அகற்றிப்பிடித்துக்கொண்டு 'சோப்' போடுவதைக் கண்டால் எனக்குப் பிடிக்காது!

இரண்டு சில பெண்கள் தங்கள் தோள்பட்டைவரை ஜாக்கெட் போட்டு, கக்கங்களில் 'பிசிறு' பிடித்தது போல் ஒட்டிக்கொண்டிருக்கும் மயிர்க்கற்றைகளைக் காட்டிக் கொண்டிருப்பதை கண்டால் எனக்குப் பிடிக்காது! இந்தக் காட்சிகளை பஸ்ஸில் போகும்போது 'வௌவால்' தொங்கலில் நிற்கும் பெண்களிடத்தில் காணலாம்!

மூன்று: நண்பர் குழாம் ஒன்று சேர்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது, அந்த நண்பர்களில் ஒரு நண்பன், இன்னெரு நண்பனை எட்டத்தில் கூட்டிக்கொண்டுபோய் காதைக் கடிப்பது எனக்குப் பிடிக்காது!

**ஜோ சிவப்பிரகாசம்,**
**நுவரெலியா,**

கே: வையகத்தில் நீங்கள் மதிக்கும் மாமனிதர்கள் யார்?

ப: மின்சாரம், தொலைபேசி, சினிமா, கார், பஸ், வானெலி மற்றும் பல யந்திரங்களையும், உடற்பிணி போக்கும் மருந்து வகைகளையும் கண்டுபிடித்த மாமனிதர்களைத் தான் நான் மதிக்கிறேன்; துதிக்கிறேன்!

**எஸ். ஏ. காதர்,**
**கல்முனை.**

கே: ரசிகர்கள் போடும் கடிதங்களுக்கு நடிகர், நடிகைகள் ஏன் பதில் போடுவதில்லை?

ப: பிரபலமான நட்சத்திரங்களுக்குப் போட்டால் NO TIME, என்றுசொல்லிவிடுவார்கள். ஆரம்ப கால நடிகர், நடிகைகளுக்குப் போட்டால் 'ரசிகர்கள் ஆதரவு



# ஹலோ தமிழ்நெஞ்சன்?

தான்' எமக்கு முக்கியம், என்று எழுதுவார்கள். ஆனுல் போகப் போக அவர்களும் NO TIME என்று சொல்லிவிடுவார்கள்.

**சோ. சீனிவாசன்,**
**பேலியகொட.**

கே: சிவாஜிக்கு மணி கட்டுவது யார்?

ப: ஏன், அவர் என்ன தேர்தலில் நிற்கப் போகிறுரா? அவரிடம் தான் நிறைய MONEY இருக்கிறதே! அவர் நினைத்தால் உங்களுக்கும், எனக்கும் சேர்த்தே 'MONEY'யைக் கட்டுவார்? அல்ல. அல்ல கொட்டுவார். தமிழ்நாட்டிலேயே சிவாஜி பெரிய பணக்காரர். ஆனுல் அவர் தன்னை ஏழையாகவே நினைக்கிறுர்.

**ஹாஜரு காதர்,**
**பண்டாரவளை.**

கே: காதலனைப் பிரிந்த காதலி ஏங்கிக்கொண்டிருக்கும் தருணத்தில் இன்னெரு ஆடவன் அவளைக்

காதலிக்க முயற்சித்தால் அப் பெண்ணின் நிலை எப்படியிருக்கும்?

ப: சபலம்–சந்தர்ப்பம் ஆகிய வைகளைப் பொறுத்ததாகயிருக்கும் அப் பெண்ணின் மனநிலை. நல்ல சந்தர்ப்பம்கிடைத்தால். அவனுக்கு அவள் இதழில் முத்தம் கிடைக்கும்! இல்லையென்றால் கன்னத்தில் மொத்தமாகக் கிடைக்கும்!

எஸ் ஏ. பேரின்பராஜா,
கொழும்பு-13.

கே: இலங்கையில் தயாரிக்கப் படும் 'பைலட் பிரேம்நாத்' படத் தில் நடிக்க சிறு சிறு பாத்திரங்கள் கிடைத்தால் நடிக்க மறுக்கும் ஈழத்து நடிகர் நடிகைகளுக்கு தாங் கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: தங்கப்பாத்திரம், வெள்ளிப் பாத்திரம், வெண்கலப் பாத்திரம், தகரப் பாத்திரமென்று எத்தனை யோ வித பாத்திரங்கள் இருக்கின் றன! அவைகளில் சிறு, சிறு பாத்தி ரங்களாக இருந்தாலும் 'இனங் கண்டு கொள்ளும்' பாத்திரமாக இருந்தால் நடியுங்கள். உங்கள் நடிப்பைக் கண்டு தமிழ்நாட்டு நடி கர்கள் 'சபாஷ்' சொல்லவேண்டும்!

எஸ் பி. நளேந்திரன்,
நுவரெலியா.

கே: வாழ்க்கையில் இன்பம் அடைய என்ன செய்யவேண்டும்?

ப: ஆசைகளை அறுத்தெறிய வேண்டும்! பந்தபாசங்களை வெறுத்தொதுக்கவேண்டும்! உண் மையை நிலைநிறுத்தி, ஊருக் குழைத்து வாழ்ந்தால் இன்பம் கிடைக்கும்!

செல்விகள் மும்தாஜ் ஷெரீப்,
சிராஜா ஷெரீப்
பண்டாரவளை.

கே: திரைப்பட நடிகைகளை 'மேக்கப்' இன்றி பார்த்தால் கவர்ச்சியாக இருக்க மாட்டார் களாமே .. ...?

ப: ஆமாம்! திரைக்கும், தெரு வுக்குந்தான் அவர்களுக்குக் 'கவர்ச்சி' வேண்டும்! அறையுக்குள் ளிருக்கும்போது எதற்குக் கவர்ச்சி?

கே: திரையுலகில் ஒரு நடிகை புகழ்பெற திறமையா, கவர்ச்சியா தேவை?

ப: இரண்டுமே தேவை! எதை யுமே கவர்ச்சியாக, படுகவர்ச்சி யாகத் திறந்து காட்டும் திறமை தான் நடிகைகளுக்கு மிக மிகத் தேவை! இல்லையென்றால் திரையுல கில் இருக்காது அவர்கள் சேவை!

ராஜலட்சுமி மூத்துக்கருப்பன்,
பாக் எஸ்டேட்.

கே: ஆவதும் பெண்ணாலே, அழி வதும் பெண்ணாலே என்று கூற்று உண்மைதானா?

ப: உண்மை, உண்மை! முற் றிலும் உண்மை என்று சொல்லி விட முடியாது. இதில் ஆண்களுக் கும் பங்குண்டு.

S. V. மெஹர்ஜான்,
வத்தளை.

கே: ஆண்கள் ஏன் பெண்களைத் தொடுவதற்கு விரும்புகிறார்கள்?

ப: இது தெரியாதா ......? எல் லாம் 'இதுக்குத்' தான் ஆமா...? இன்னுமா ....தெரியல்ல..........?

---

உங்கள் கேள்விகளை ஒரு தபா லட்டையில் எழுதி, கீழ் உள்ள கூப் பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

ஹலோ தமிழ்நெஞ்சன்
வெஸ்பா பிரிண்டர்ஸ்,
283, லேயார்ட்ஸ் பிராட்வே,
கொழும்பு-14.

---

## இலங்கை வானொலியில் ஒவ்வொரு ஞாயிறும் நடைபெறும் கீதா நிகழ்ச்சி

இலங்கை வானொலியில் உங்கள்
பெயர்களும் பாடல்களும்
இடம் பெற வேண்டுமா?

கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர் கீதா - கீத மஞ்சரி, வெஸ்பா அச்சகம்
283 லேயார்ட்ஸ் பிராட்வே, கொழும்பு - 14

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழ மையன்று காலை 9-30க்கு இலங்கை வானொலி சேவை இரண்டில் நடை பெறும் ''கீதாவின் கீத மஞ்சரி'' நிகழ்ச்சியில் உங்கள் பெயரும், நீங் கள் விரும்பும் பாடலும் இடம் பெற வேண்டுமானால், கீழ்க்காணும் கூப்பனை நிரப்பியனுப்பி வையுங் கள்.

நிபந்தனை– ஒருவர் எத்தனை கூப் பன் வேண்டுமானாலும் அனுப்ப லாம். ஆனால் கூப்பனில் ஒருவரின் பெயர்தான் எழுதப்பட வேண்டும்.

கீதா கீத மஞ்சரி
வாசகர் விருப்பம்

கீதா ரசிகர் சங்கம்
உறுப்பினர்

இல...............

பெயர்.........................................................

முகவரி.........................................................


பாடல்......................................................

தேதி 1. 4 78 கையெழுத்து

# சூரிய பகவானுக்கு காதலில் விருப்பு!

சூரிய எண் ஆகிய 19-ம் சிறப்பு எண்ணின் ஆதிக்கத்தை பிரித்து ஆராய்ந்து பார்ப்போம். 1-9, இவ்விரண்டும் இணைந்து 19 என்னும் இணை எண்ணுகத் தோன்றுகிறது ஒன்று, சூரியன் என்றும், ஒன்பது செவ்வாய் என்றும், இவ்விரண்டும் ஒன்றரக் கலந்து சூரியன், செவ்வாய் என்று தோன்றுகின்றது. சூரியன் ஆண் கிரகமென்றும், செவ்வாயும் ஆண் கிரகமென்றும் அறிந்துகொள்க:-செவ்வாய் சிவ பெருமான் யோக தவத்திலிருக்கும் போது, நெற்றியில் வியர்வையுண்டாகி அவ்வியர்வை பூமாதேவியின் மடியில் விழ குழந்தை உருப்பெற்றது என்றும் நிலமகளால் அருகணைத்து வளர்த்தாள் என்றும், ஆய கலைகள் பயில 'பாராத்துவாச' முனிவரிடத்தில் பயில வைத்தாள். தவ யோகங்களையும் சிவ சித்த யோகங்களைத் தவஞ்செய்து அருள் பெற்று அதன் பயனே நவக்கிரகங்களில் ஒன்முக இடம் பெற்று, சிறப்புதனை அடைந்தாள். செவ்வாய்க்கு முருகப்பெருமானின் சில அம்சங்கள் உண்டென்றும், ஆட்டை வாகனமாகக் கொண்டும், சக்தியை ஆயுதமாகக் கொண்டும், சிவந்த மேனியும், சிவந்த ஆடைகளையும், செம்பாகிய உலோகத்தையும், பவளத்தையும் அணிகலனுகக் கொண்டவன். இவனின் குணம் ஆக்ரோஷன சக்தியும், எதிர்ப்பும், வீரமும், மனேவலிமையும், திடகாத்திரமுடையவன். ஞானவந்தன், சூரியன், சந்திரன், குரு ஆகிய நவக்கிரகங்களுக்கு அதி நண்பனும்.

19-ம் எண்ணில் இரண்டு ஆண் கிரகங்கள் ஒன்றுக இருப்பதனுல் அதிக சக்தியும், மனேபலமும், வீரிய குணங்களும் தன் மனதில் தோன்றியதை அப்படியே செய்யும் ஆற்றலுடையவர்களென்றும், மற்றவர்கள் உபதேசத்தை கருத்திற்கொள்ளமாட்டார்களென்றும், தமது கருத்தையே வெளிப்படுத்தி செயற்படுவார்களென்றும், சூரியன் தன் கதிரால் ஆட்சி கொள்வது போன்று செவ்வாயும் ஆணவாதிக்கமுடையவனுய் இருப்பதினுல் இவ் 19 எண் உலகாளும் மன்னனைப்போன்று விளங்குகின்றது. சூரியனுக்குப் பல மனைவிகள் இருப்பதினுல் காமலீலையில் அதிக கருத்துள்ளவனெனக் கருதுவதினுல் இவ் எண் ஆதிக்கத்தில் பிறப்பவர்களும்



எண்கணித சக்கரவாத்தி
மாஸ்டர் டி. ஆர் எம். தாவூத்

காதலுக்கு அரசர்கள் என்று வர்ணிக்கலாம். செவ்வாய் ஞானவந்தனுய் இருப்பதினுலும் சூரியன் அதிகாரமுடையவனுகக் காணப்படுவதினுல் இவ்விரண்டும் ஒன்றரக்கலந்து இருப்பதால் ராஜபோக வாழ்க்கை உடையவர்களென்றும், கம்பீரமான நடையுடையவர்களென்றும் குன்றுத புகழும், செல்வமும் அடைபவர்கள் என்றும் பட்டம், பதவிகள் சூரியனின் பிரகாசம் எவ்வாறு உலகில் பெருமைப்படுகின்றதோ, அவ்வாறு இவர்களின் புகழும் உலகணைத்துப் பரவச்செய்யும். இவர்களின் தோற்றம் சூரிய ஆதிக்கத்தாலும், செவ்வாயின் ஆதிக்கத்தாலும், செவ்வாய் முருகப்பெருமானின் அங்கலட்சனங்களை அடைந்திருப்பதினுல் இவ் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்களும் சகல சமுத்திர அங்கலட்சனங்களை பொருத்தியிருப்பார்கள். இதனுல் இவர்கள் தமக்கு அடையும் மனைவியும் சகல குணம்சங்களும் பொருந்தியவளாகவே அடைகின்றனர். சூரியபகவான் அழகில் சிறந்த ஊர்வசியிடம் காதல் கொண்டார் என்றும் ஓர் கதையுண்டு. எனவே எமது கருத்தில் நன்கு புலப்படுகின்றது சூரிய ஆதிகத்தின் எண்ணில் பிறப்பவர்கள் அனைவரும் அழகு, அன்பு, ஆணவம், ஆதிக்கம், இன்பம் இவை போன்ற யாவற்றையும் இன்புற்று வாழ்வார்களென்று அறிய முடிகிறது.

28 என்னும் எண்ணின் இரட்டை எண்களை பிரித்துப் பார்ப்போம்:- சந்திரபகவான் ஆகிய இரண்டு என்னும் எண்ணும் சனிபகவான் ஆகிய எட்டு என்னும் எண்ணும் இவ்விரண்டும் கூட்டி வரும் 28 என்னும் எண் சூரிய ஆதிக்கமாகிய ஒன்றுகிறது. இதுவேதான் மாதத்தில் வரும் 28-ந் திகதி எனும் எண்ணும். இவ் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் தத்துவங்களையும் குணங்களையும் இவ் ஆதிக்கத்தால் அறியலாம்.

சந்திரன் சூரியனின் ஒளியைப் பெற்று உலகெங்கும் இராக் காலங்களில் தன் ஒளியை பூமிக்குப் பரப்பும் தன்மையுடையவன். இதனுல் மரம், செடி, கொடிகள், தாவரங்கள் யாவையும் காக்கும் தன்மை

# சனி பகவானுக்கு திருமணத்தில் வெறுப்பு!



யுண்டாம். சந்திரபகவான் பெண் தன்மையுடையவள் என்றும் பெண்களாகிய இன்பப் பொருட்கள் அனைத்தையும் விரும்பும் தன்மையுடையவனென்றும் அதனால் பல தடவைகள் சாபக்கேட்டுக்குள்ளானான் என பல நூல்களில் வைவதைக் காணலாம். சந்திரபகவான் திருமணம் செய்யவேண்டுமென எண்ணி தட்சனுடைய மகளை திருமணம் செய்து தரும்படி வேண்டினான். அதற்குத் தட்சன் இணங்கி தன் மக்களாகிய 27 பேர்களையும் சந்திரபகவானுக்குத் திருமணம் செய்துகொடுத்தான். சந்திரபகவானோ எல்லோரிடத்திலுமோர் சமபங்கு அன்பைச் செலுத்தாமல் பாரபட்சமான அன்பைச் செலுத்தினான். கார்த்திகையினிடமும், ரோகினியிடமும் பேரன்பு மிகுந்த இன்புற்ற காதல் லீலையில் மூழ்கி வாழ்வதைக் கண்ட மற்ற சகோதரிகளாகிய நட்சத்திரங்கள் அதிருப்தியடைந்து கோபங்கொண்டு பழிவாங்குவதற்காக தமது தந்தையாகிய தட்சனிடம் போய் முறையிட்டார்கள். இதைச் செவியுற்ற தந்தையோ பொங்குஞ் சினங்கொண்டு சீறியெழுந்தார். அடக்க முடியாத ஆவேஷம் சினந்தெழ என்ன செய்வதென தெரியாது தடுமாறி நின்றார். கோபத்தின் விளைவால் சந்திரனைச் சபித்தான். உன் பூர்வாங்கக் கலை தேயட்டுமென்றும் சபித்தான். இதன்பொருட்டு 15 நாள் வளர் பிறையும் 15 நாள் தேய் பிறையுமாக மாற்றப்பட்டான். முதல் 15-நாள் தேவர்கள் அருந்துபவர்கள் என்றும் மற்றப் 15-நாள் புலத்தர்கள் அருந்தலாயினர். சனிபகவான், சூரியபகவானுக்கும், சாயாதேவிக்கும் புதல்வனாகப் பிறந்தான். ஒருகால் மெலிவுடையதென்றும், அதன் காரணமாக பதமையான நடையுடையவனென்றும், எவ்விடயங்களையும் கூர்ந்தாழ்ந்து செய்வதினால் தாமதக் குணமுடையவனாகவும் காணலாம். ஓர் சந்தர்ப்பத்தில் திருமணத்துக்கு அச்சப்பட்டவனாகவும், வெறுப்புற்றவனாகவும் காணப்பட்டான். இவன் தவயோக சித்தம் பெற்றவன்.

இவ்விருவரும் ஒன்று சேர்ந்த எண்ணே 28 எனும் எண். இவ் 28 எண், ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் ஓரளவு நேர்மையுடையவர்களாகவும் நற்சிந்தையுடையவர்களாகவுமிருப்பார்கள். மூர்க்க குணமும், தான் என்னும் இயல்புமுடையவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள் போல் உரத்த குரலில் பேசுவார்கள். இதனால் இவர்கள் மற்றவர்களின் மனதைக் கவர்வது துர்லபமே சந்திரன் எவ்வாறு வளர்ந்துகொண்டு வருகிறானோ அவ்வாறே இவர்களின் வாழ்க்கையின் ஆரம்பத்தில் எதிர்பாராத முன்னேற்றங்களும் அதிவேக சக்திகொண்டு புகழடைய விரும்புவர். பூரணச்சந்திரன் எவ்வாறு பூரணம் பெற்றானோ அதே போன்று இவ் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் பூரண வாழ்க்கையை அடையும் நேரத்தில் பல இன்னல்களும் துன்பங்களும் இவர்களை அணுகிவிடுகின்றது இதனால் இவர்கள் வாழ்க்கை முன் ஆரம்பித்த முதலிடத்துக்கே சென்றடைகின்றது. எவ்வாறெனில் பூரணமடைந்த சந்திரன் தன் 15ம் கலையை தேய் பிறையாக அமைத்துக்கொண்டு 15 நாட்களுக்கு தேயும் கலையாக மாறுகின்றான். இதனால்தான் இவ் எண் ஆதிக்கத்தில் உள்ளவர்களும் தேய்பிறை போல் தங்கள் வாழ்க்கையை நிறைவுற்ற வாழ்க்கையின் சகலவற்றையும், சகல அந்தஸ்துக்கள், அதிகாரங்கள் யாவையும் கையிழக்க நேரும். அமாவாசை இருட்டுப் போல் இவர்கள் வாழ்க்கையும் அஸ்தமனமடைந்து மீண்டும் தங்கள் வாழ்க்கையை ஆரம்பத்திலிருந்து ஆரம்பிக்க முயற்சி செய்வர். எவ்வாறெனில் சந்திரன் தன் 15 வளர்கலையையும் 15 தேய்கலையையும் முடிந்து மீண்டும் மேற்கே வளர்மதியாய் உதயமாகிறான். இவ்வாறமைந்த குணத்தின் பலனே இரண்டுடன் எட்டாய் அமைந்த எண்ணின் பலனும். சனிபகவான் தன் தந்தையாகிய சூரிய பகவானின் எண்ணில் அமைந்திருப்பதினால் இவ்வெண்ணில் பிறப்பவர்கள் சௌந்தர்யமான அழகைப் பெற்றவர்கள் என்றும், சுவையாக சிரித்துப் பேசும் தன்மையுடைவர்களென்றும், மற்றவர் மனதைக் கவர்ந்து நடக்க முற்படுபவர்களென்றும், அதன் பலன் சந்திரனின் குணத்தால் தேய்ந்துவிடுகின்றதென தெரிகின்றது. இவ் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் காதலித்தாலும் அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து நயக்கும் தன்மையற்றவர்கள். காதலித்து திருமணம் செய்ய இவர்கள் மனோவலிமை குன்றியிருப்பதே இதற்குக் காரணம். ஏன் இவ் எண் இவ்வாறு குறைகொண்டிருப்பதற்குக் காரணமென்ன? சனிபகவானே ஓர் சந்தர்ப்பத்தில் திருமணம் செய்ய வெறுப்புற்றதாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. இதன் விளைவே இவ் எண்ணுக்கு நேர்ந்த இன்னலாகும். இவர்களின் வாழ்க்கையில் கொடுக்கல், வாங்கல், என்பதில் எப்போதும் பிரச்சினையேற்பட்டுக் கொண்டேயிருக்கும். ஒருவரிடத்தில் பணத்தை கடனாக வாங்கினால் அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு மிகவும் சிரமப்படுவார்கள். ஒருவருக்கு பணத்தை கொடுத்தால் அப் பணத்தை வசூல் செய்வதற்கு மிக மிக சிரமப்பட நேரிடும். ஆதலால் இவர்கள் பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

தொடரும்



# கோ முத்துக்கள்

பிறரோடு பேசிக்கொண்டிருக்கும்போது தத்துவம், யதார்த்தம், சித்தாந்தம், நகைச்சுவை, அறிவுரை போன்ற பல்வேறு அம்சங்களை பற்றிப் பேசுவதில் நண்பர் கோமு சமர்த்தர்.

''உங்கள் கருத்துக்களைப் பேச்சில் நாம் கேட்டு மகிழ்வதுபோல, எமது வாசக நேயர்கள் அதை எழுத்தில் படித்து இன்புற நீங்கள் வழி செய்வீர்களா?'' என்று கேட்டபோது, ''நிச்சயமாக எழுதுகிறேன்'' என்ற நண்பர் கோமுவின் பக்கத்தை நீங்களும் சுவைத்துப் பாருங்கள். அதுபற்றிய உங்கள் கருத்துக்களையும் எமக்கு எழுதியனுப்புங்கள்.

(ஆ-ர்)

## 'உதை' பந்தாட்டம்

ஒரு கல்லூரியில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டிக்குத் தலைமைவகிக்க உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவரை அழைத்திருந்தார்கள்.

இந்தப் போட்டியையொட்டி நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு ஆங்கிலத்தில் சொற்பொழிவு ஆற்றினார்கள். இறுதியாக பொலிஸ் அதிகாரி உரையாற்றினார்.

அவர் பேசும்போது:—

''கால்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கும் எத்தனையோ புகழ் பெற்ற வீரர்கள் இருக்க, என்னை இந்தப் போட்டிக்கு ஏன் தலைமை தாங்க அழைத்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. ஒருவேளை, பொலிஸ் துறையைச் சேர்ந்தவர்கள் 'உதை' பந்தாட்டத்தில் சிறந்தவர்கள் என்ற கருத்து நிலவுவதால் அழைத்தார்கள்போலும்..'' என்று குறிப்பிட்டார்.

## கவுண் மாடு

ஒரு பண்ணையார் வண்டியில் ஏறி அமர்ந்ததும் வண்டி புறப்பட்டது. இரவு நேரமானதால் பயணம் ஆரம்பமான உடனேயே அவர் நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்.

நீண்ட நேரம் அந்தப் பயணம் தொடர்ந்தது, பயணத்தின்போது பண்ணையார் ஒரு நேரமேனும் கண் விழிக்கவில்லை. ஒரு சமயம் வண்டி குலுங்கி நின்றதும் பண்ணையார் கண் விழித்தார். அப்போது, தான் பயணம் செய்த இடத்திலேயே வண்டி நின்றிருப்பதைக் கண்டு கொண்டார்.

உடனே வண்டிக்காரனிடம், ''என்னப்பா, பயணம் செய்த இடத்திலேயே வண்டிநிற்கிறதே?'' என்று கேட்டார்.

''கிணற்றில் இருந்து தண்ணீர் இறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கவுண் மாடுகளை வண்டிக்குப் பூட்டிவிட்டேன். அவைகள் முன்னால் சென்று, மீண்டும் பின்னால் திரும்பி வந்துவிட்டன. இப்படியே தொடர்ந்து நடந்ததால் தான் வண்டி இங்கேயேநிற்கிறது''என்று வண்டிக்காரன் பதில் கூறினான்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு நல்ல உதாரணம் இல்லையா?

## எம். ஏ. சிங்கம்

ஒரு இளைஞன் பி. ஏ. படித்தும் உத்தியோகம் கிடைக்கவில்லை. ஏறாத படியெல்லாம் ஏறி இறங்கி வேதனை அடைந்த இவன் ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொள்ளப்போனான். அப்போது அவனை, ஒரு பெரியவர் வந்து காப்பாற்றினார்.


அந்த இளைஞனைக் காப்பாற்றிய பெரியவர், அவனை ஒரு சர்க்கஸ் கம்பெனியில் சேர்த்துவிட்டார். சர்க்கஸ் கம்பெனியில் அவனுக்கு கிடைத்தது கோமாளி வேஷம் போடும் பபூன் வேலை.

ஒருநாள் இந்த இளைஞன், தவறிப்போய் சிங்கக் கூண்டிற்குள் அடைபட்டான். சிங்கம் அவனை முறைத்துப் பார்த்தது. இதைக் கண்டதும் இளைஞனுக்குப் பயம் ஏற்பட்டது. ''அன்று ஆற்றில் குதித்து இருந்தால் அமைதியாக இறந்திருப்பேன். அந்தக் கிழவன் செய்த வேலையால் இன்று அநியாயமாகச் சாகவேண்டி இருக்கிறதே... பி. ஏ. என்ன, எம். ஏ. என்ன, எல்லாம் வீண்'' என்று கூறி வருத்தப்பட்டான்.

அப்போது அந்தச் சிங்கமும் அவன் அருகில் வந்தது. ''நீ பி. ஏ. படித்து வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்படுகிறாய். ஆனால் நானும் ஒரு எம். ஏ.'' என்றது. இதனைக் கேட்டு அந்த இளைஞன் வியப்படைந்தான்.

வேலையில்லாப் பிரச்சினை எங்கும் இருக்கிறது என்பது இதிலிருந்து புரிகிறது அல்லவா?

---




கமலஹாசனுக்கு அடிக்கடி பெண்களிடமிருந்து டெலிபோன் வரும். சில பெண்கள் தன்னுடன் தனியாக சினிமாவிற்கு வரமுடியுமா, கடற்கரைக்குக் காற்று வாங்கப் போகலாமா என்று கமலஹாசனைக் கூப்பிடுகிறார்கள்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கைகாரர்கள்
அனைவருக்கும் எமது தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்

பேப்பர், வாசனைப் பொருட்கள் மற்றும்
அன்றுடத் தேவைகளுக்கு வேண்டிய
பொருட்கள் அனைத்துக்கும்
நாட வேண்டிய இடம்



# ஜோசப் ஸ்டோர்ஸ்

ஜெனரல் மெர்ச்சண்ட்ஸ் & கமிஷன்ஸ் ஏஜண்ட்

42, செண் ஜோன்ஸ் வீதி,

கொழும்பு-11.

தொலைபேசி:

25608

24305







அண்மையில் விஜயா ஸ்டுடியோவில் நடைபெற்ற 'பைலட் பிரேம்நாத்' படப்பிடிப்பின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

① சிவாஜி

(2, 3.) விஜயகுமார்
ஜெய்கணேஷ்
சிவாஜிகணேசன்.

படப்பிடிப்பு:
மைக்கல் விக்டோரியா



படப்பிடிப்பு: லாடாசாமி

## எம்.ஜி.ஆரின் புதிய வளர்ப்புப் பிள்ளை!

மக்கள் திலகம் இலங்கையைச் சேர்ந்த குழந்தை ஒன்றை தனது வளர்ப்புப்பிள்ளையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். 'தமிழரசன்' என்ற பெயர் கொண்ட இக்குழந்தையின் தந்தையான பெர்னாண்டோ என்பவர் எம்.ஜி.ஆரின் ரசிகராவார்.

எம்.ஜி.ஆர் திரு. பெர்னாண்டோவுக்கு ரூபா-10,000க்கான காசோலை ஒன்றையும் நன்கொடையாக கொடுத்தார். இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த எம்.ஜி.ஆர் எதிர்ப்புத் தினசரியொன்று முதலமைச்சரின் 'பிள்ளை பிடி பிஸ்னஸ்' என கிண்டல் செய்திருக்கிறது.



## இவரைத் தெரிகிறதா?

தமிழ்த் திரையுலகில் பெரும் பணமும் புகழும் சம்பாதித்துவிட்டு தமிழ்த்திரையுலகையே இழந்துவிட்டுச் சிங்கப்பூர் சென்ற மாதவிதான் இவர். வாழ்க்கை கசந்துவிட்டதாம் இப்போது. மீண்டும் யாராவது சினிமா சான்ஸ் தரமாட்டார்களா என ஏங்குகிறாராம்.

## ஜெயலலிதாவுக்கு மீண்டும் சான்ஸ்!

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் முதலமைச்சரும் மீண்டும் திரையுலகில் நுழைவதை தொடர்ந்து பல மாஜி நட்சத்திரங்களுக்குத் 'திடீர்' யோகம் பிறந்திருக்கிறதாம். ஜெய்சங்கர்-ஜெயலலிதா நடிக்கவிருக்கும் 'உலகம் சுற்றும் வாலிபன்' பாணியிலான பிரமாண்டமான தயாரிப்பு பற்றி ஸ்டுடியோ வட்டாரங்களில் பரபரப்பாக பேசிக்கொள்ளப்படுகிறது.



# அந்தரங்கம்!

(அறிவாளிகளுக்கு மட்டும்)





## எம்.ஜி.ஆரின் புதிய ஜோடி!

வீ.பி.பிலிம்ஸ் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கும் புதிய தயாரிப்பில் எம்.ஜி.ஆர் ஜோடியாக கல்லூரி மாணவியான வனிதா தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் வயது 16

## கிசு கிசு!

● முத்தக் காட்சிகள் பற்றிய சர்ச்சையின் போது ஒரு பழம் பெரும்நடிகை சலித்துக்கொண்டாராம். "நாங்கள் செய்யாததையா இவர்கள் செய்யப்போகிறார்கள்?" என்று சலித்துக் கொண்டதாம் இந்த வாடிய தேவி!

● ஒரு நாவலெழுத்து 'ஸ்ரீ'க்கும் காதல் இளவரசனுக்கும் லடாய் ஏற்பட்டிருக்கிறதாம். தானும் அந்த 'ஸ்ரீ'யும் பங்கு கொண்ட அந்தரங்க நாடகத்தை நாலுபேர் முன்னிலையில் அழகாக எடுத்து விவரித்ததாம் அந்த அசட்டு இளவரசன்!



## இவரும் முத்தம் கொடுக்கிறார்!

கமலஹாசன் முத்தக்காட்சியில் நடித்ததைத் தொடர்ந்து இன்னொரு தயாரிப்பாளரும் இந்த முயற்சியில் துணிந்து இறங்கியிருக்கிறார்.

ஜெய்சங்கர்-பவானி நடிக்கும் இவருடைய படத்தில் இக்காட்சி இடம் பெறும்.

நடிகை பவானி இதற்கு சம்மதம் தெரிவித்து இருக்கிறார்.



வாசகர்களுக்கு ஒரு வார்த்தை' ஏப்ரல் மாதம் முதலாம் திகதியன்று வெளியான செய்திகள் இவை! (முட்டாள் தினம்). இவற்றை நீங்கள் நம்பினால் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல!

கீதா

## மேடையிலே புலி!



ஈழத்தின் புரட்சிக் கலைஞரான டாக்டர் இந்திரகுமார் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று புதுமையான நாடகத்தை அரங்கேற்றவிருக்கிறார்.

சுகததாச ஸ்டேடியத்தில் நடைபெறவிருக்கும் இந்த நாடகத்தில் புலியொன்று மேடையேற விருக்கிறது.

இதற்காக தேவர் பிலிம்ஸைச் சேர்ந்த சாண்டோ ராஜா என்பவர் இவ்வார முடிவில் இலங்கை வரவிருக்கிறார்.

# வாலிக்குப் பிடித்தமான கண்ணதாசன் பாடல்

இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்பில் உருவாகும் 'பைலட் பிரேம்நாத்' படத்தில் இடம்பெறும் 'இலங்கையின் இளம் குயில் இசை பாடுதோ' என்ற கவிஞர் வாலியின் பாடல், இந்தப் படத்தின் ஆரம்ப பூஜையின் போது ஏ. வி. எம். ஸ்டுடியோவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது,

இந்தப் பாடலுக்கான ஒத்திகை சென்னையில் உள்ள வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றது.

இந்தப் பாடலில், 'வந்து வந்து' என்ற வார்த்தைகளை வாலி சேர்த்திருந்தார். அந்த வார்த்தைகளை 'வந்து உவந்து' என்று பாடும்போது உச்சரித்தால் நன்றாக இருக்குமென கவிஞர் வாலி கூறினர்.

'கவிஞர்கண்ணதாசனின் பாடல்களில் 'பூஜைக்கு வந்த மலரே வா' என்ற பாடல் எனக்கு மிக மிக பிடிக்கும். இந்த வரியை இரண்டு அர்த்தங்கள் பட பாடலாம். 'பூஜைக்கு வந்த மலர்' என்பதை 'பூஜைக்கு உவந்த மலர்' என்றும் பாடலாம். இதன் காரணமாகவே இது எனக்கு ரெம்பவும் பிடித்திருக்கிறது' என்று சொன்னுர் கவிஞர் வாலி.

ஆனுல் அவர் நினைத்ததைப் போல ''வந்து உவந்து'' என்று டி. எம். சௌந்தரராஜனுல் அன்று பாடமுடியவில்லை. எனவே, ''என்றும் இந்த பூமியிலே'' என்று இந்தப் பாடலில் மாற்றம் செய்யப்பட்டது.

''இலங்கையின் இளம் குயில்'' என்று ஆரம்பமாகும் இந்தப் பாடல் தற்போது டி. எம். சௌந்தரராஜனின் குரலில் மீண்டும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இந்தப் பாடல் இடம்பெறும் காட்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் ஈழத்து முன்னணித் தாரகை மாலினி பொன்சேகா நடிக்க இருக்கிறுர்.

இக் காட்சி ஏப்ரல் மாதம் படமாகப்பட இருக்கிறது.

'பைலட் பிரேம்நாத்' படத்துக்காக ஏ. ஈ. மனேகரனும், எல். ஆர் ஈஸ்வரி கோஷ்டியினரும் பாடிய பாடல் ஒன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே. இந்தப் பாடல் காட்சி, அண்மையில் விஜயா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

'பைலட் பிரேம்நாத்' படப்பிடிப்பு மீண்டும் இம்மாதம் 19-ம் திகதி தொடக்கம் மாத இறுதி வரையில் நடைபெற இருக்கிறது. இதில் பங்குகொள்ளுவதற்காக, இந்தியக் கலைஞர்கள் அனைவரும் இம்மாதம் 18-ம் திகதியன்று மீண்டும் இலங்கை வருவார்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், விஜயகுமார், மேஜர் சுந்தரராஜன் ஆகியோரின் துணைவியரும் இம்முறை இங்கு வர இருக்கிருர்கள்.


இந்தப் படத்தின் படப்பிடிப்பை இம்மாத இறுதிக்குள் முடித்துவிட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அதிக ஆர்வம் கொண்டிருப்பதாக படப்பிடிப்போடு சம்பந்தப்பட்டவர்கள் 'கீதா' வுக்குக் கூறினர்கள்.

ஏனைய கலைஞர்களின் ஒத்துழைப்பும் பூரணமாக வழமை போல் கிடைக்குமென தயாரிப்பாளர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

'ஜெயா'



ஹலோ....வ் ...நான்தான் நடிகையின் கணவன் பேசறேன்! முந்தாநாள் சூட்டிங் போனவள்தான் இன்னும் வரல்ல.... .மூன்று நாளா..... முதலிரவுக் காட்சிக்காக 'ஷாட்' எடுக்கிறுங்களாம்.... எந்தெந்த இடத்தில்...... எப்படியெல்லாம் 'ஷாட்' எடுக்கிருங்கண்ணு தெரியல்ல ... ! பார்த்துட்டா... நான் விசாரித்ததாகச் சொல்லுங்க .....குளிக்கக்கூட விட மாட்டேங்கிறுங்களே... .!.




ஒரு படப்பிடிப்பில் கலந்து கொண்டு பத்மபிரியா நடித்துக் கொண்டிருந்தபோது அந்த செட்டிற்குள் ஜெயலலிதா நுழைந்தார். பெரிய நடிகையாயிற்றே தன்னுடன் பேசவா போகிருர் என்று பத்மபிரியா சும்மாவே இருந்துவிட்டார். ஆனுல் ஜெயலலிதா இவர் அருகில் வந்து என்ன பத்மப்பிரியா சௌக்கியமா? என்று தானுகப் பேசினர். இவர் இப்படித் தன்னிடம் பேசியதைப் பத்மப்பிரியா எல்லாரிடமும் சொல்லிச் சந்தோஷப்படுகிருர்.

# மேஜரின் அழைப்பை ஏற்க எவரும் முன் வராததேன்?

இலங்கை இந்தியக் கூட்டுறவில் உருவாகும் 'பைலட் பிரேம்நாத்' திரைப்படத்தில் நடிப்பதற்காக கடந்த மாதம் இலங்கை வந்திருந்த மேஜர் சுந்தரராஜன், இருநாட்டுக் கலைத்தொடர்பை பலப்படுத்தவும், இருதேசக் கலைஞர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும் பெரிதும் முயன்றார்.

இலங்கையில் தாம் தங்கியிருந்த காலங்களில் நமது கலைஞர்களுடன் நெருங்கிப் பழகினர். அவர்களது உள்ளக் குமுறல்களைத் தெரிந்து கொண்டார். 'வாடைக்காற்று' திரைப்படத்தை பார்த்தார். 'காத்திருப்பேன் உனக்காக' திரைப்படத்தின் சில பகுதிகளையும் கண்டு ரசித்தார்.

வாடைக்காற்று திரைப்படத்தை உளமாறப் பாராட்டிய அவர், அந்தக் கதையை எழுதிய செங்கைஆழியானின் பாத்திர உருவாக்கத்தைப் பெரிதும் மெச்சினர். அத்தோடு, செங்கை ஆழியானின் கதை ஒன்றையும் மேடையேற்ற விருப்பம் தெரிவித்தார்.

நமது கலைத்திறனைக்கண்டு கொள்ளும் முன்னரும், நம் கலைஞர்களைச் சந்திக்கும் முன்னரும் அவர் நம்மீது கொண்டிருந்த பற்றுதலும் சதாரணமானதல்ல,

இலங்கையின் நாளிதழ்களுக்கு அவர் அளித்த பேட்டிகளில் இருந்து, இலங்கைக் கலைஞர்களின் உயர்வை அவர் பெரிதும் விரும்புகிறார் என்பதைத்தெரிந்து கொள்ள முடிந்தது.

அவர் சொன்னர்:-

'உங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க நாங்கள் தயார். அதற்கு முன்னர் உங்கள் திறமைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்கான வழிவகைகளை நாம் ஆரம்பத்தில் காண வேண்டாமா?

'உங்கள் நாட்டுக் கலைஞர் ஏ. ஈ. மனேகரனின் திறமை எங்களுக்குத் தெரிய வந்தது. எனவே அவர் எங்கள் நாட்டுத் திரைப்படங்களில் நடிக்கவும் பாடவும் வாய்ப்புக்கள் கிடைத்தது. அவரைத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் உறுப்பினராகவும் நாங்கள் சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். எமது கலைத்துறையின் மாபெரும் கலைஞர்களான மக்கள் திலகம், நடிகர் திலகம் ஆகியோர் முக்கிய பங்கு வகித்த தென் இந்திய நடிகர் சங்கத்தின் புயல், வெள்ள நிவாரண நிதி நிகழ்ச்சிகளில் உங்கள் மனேகரனுக்கு முக்கிய இடம் அளித்தோம்.

இந்த நட்சத்திர விழா நடைபெற்ற ஊர்களில் எல்லாம் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டார்கள். அவர்களுக்கு எல்லாம் மனேகரனை அறிமுகம் செய்து வைத்தோம்.

மனேகரனின் பாடல்களுக்கேற்ப மக்கள் திலகம், நடிகர் திலகம் இருவரையும் தவிர நட்சத்திரங்கள் அனைவருமே மேடையில் ஆடினோம்.

உங்களை அழிக்க வேண்டும். ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால், மனேகரனுக்கு சந்தர்ப்பம் அளித்திருப்போமா?

நமது இருநாட்டுக் கலைத்தொடர்பையும் பலப்படுத்த வேண்டும். நம்மிடையே இருக்கும் வேறுபாடுகளைக் களைய வேண்டும். அதற்கு நாம் வழிகாண வேண்டும். தனி மனிதனுல் அதனைச் சாதிக்க முடியாது. இயக்கமாக இருந்து தான் சாதிக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள நடிகர் சங்கத்திற்கும், தென் இந்திய நடிகர் சங்கத்திற்கும் இடையில் தொடர்பினை முதலில் ஏற்படுத்துவோம். அந்தத் தொடர்பு நமது உறவினைப் பலப்படுத்தும்.

இப்படியான ஒரு இணைப்பு உருவாகினல் எமது நடிகர் சங்கத்தின் மூலமாக நீங்கள் உங்கள் நாடகங்களை எமது நாட்டில் மேடையேற்றலாம். உங்கள் கலைப்படைப்புக்களை அங்கு அனுப்பி வைக்கலாம். அதுபோலவே நாங்களும் இங்கு வந்து நாடகங்கள் மேடையேற்றலாம்.

''இதற்கான தடைகளை, இயக்கமாக இருந்து அகற்றுவோமேயானல் நம்மிடையே பேதம் இருக்காது, பிரிவினை இருக்காது, பாகுபாடு இருக்காது.''

இந்தக் கருத்தினை, தம்மைச் சந்தித்த அத்தனை பத்திரிகையாளர்களிடம் வெகு விரிவாக, விவரமாக எடுத்துக் கூறினர்.

மேஜர் சுந்தரராஜனின் இந்தக் கருத்துக்களை தனி மனிதனின், அல்லது ஒரு நடிகனின் கருத்தாக மட்டும் கொள்ளக் கூடாது. அவர், பலம் வாய்ந்த ஒரு இயக்கத்தின் உயிர்நாடிகளில் ஒருவர். ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களை கொண்ட தென் இந்திய நடிகர் சங்கத்தின் (தமிழகத்தின் அல்ல) பொதுச்செயலாளர் அவர். எனவே அவரது அழைப்புக்கு அர்த்தம் இருக்கிறது. அதற்கு ஒரு மகத்துவமும் இருக்கிறது

ஆனல், அந்த அழைப்பை ஏற்கும் சக்தி நமக்கு இருக்கவில்லையே? நமது கலைஞர்களுக்கென ஒரு ஒற்றுமையான சங்கம் இருந்திருந்தால் இந்த அழைப்பை ஏற்று அவரோடு பேசிப்பார்த்து இருக்கலாம். அவர் கூறும் கருத்துக்கள் சாத்தியமானவையா, நிறைவேற்றக்கூடியனவா என்று ஆராய்ந்து இருக்கலாம். அடுத்த நடவடிக்கையில் இறங்கி இருக்கலாம்.

எனவே, ஈழத்துக் கலைஞர்கள் இனிமேலாவது வேறுபட்டு, மோதுபட்டுக் கொண்டு இருக்காமல் ஒன்றுபட்டு உழைக்க முன் வருவார்களா?

'ஜெய்'

## கே.எஸ்.பாலச்சந்திரன்



இலங்கை வானொலியின் 'தணியாத தாகம்' நாடகத்தின்மூலம் சோமுவாக நடித்துப் புகழ் பெற்றவர்.

'வாடைக்காற்று' படத்தில் கிராமத்து இளைஞன் விருத்தாசலமாக நடிக்கிறார். உள்நாட்டுக்கலைவளர்ச்சிக்கு என்றுமே தோள் கொடுக்கும் 'கீதா' இவரையும் வாழ்த்துகிறது.

படத்தில்:
வாடைக்காற்றிலிருந்து ஒரு கட்டம்.

"பைலட் பிரேம்நாத்" திரைப்படத்தில்
நடிப்பதற்காக இலங்கை வந்த கலை-
ஞர்கள் அனைவரும் "கீதா"வுக்காக
தேநீர் விருந்தில் சந்தித்துக் கொண்டார்
கள் அந்த சந்திப்பில் எடுக்கப்பட்ட
படங்கள் இங்கு காணலாம்.

படப்பிடிப்பு: தவம்







